# சுவாமி தயானந்தா கலை & அறிவியல் கல்லூரி

## மஞ்சக்குடி

முனைவர். கி. மணிவாசகம்

தலைவர் தமிழ்த்துறை

**பாடத் தலைப்பு** – சீறாப்புராணம், இயேசு காவியம், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், ஆண்டாள், பேயாழ்வார், பகுத்தறிவு இலக்கியம், திருமூலர் – திருமந்திரம், பட்டினத்தார் பாடல் – திருவிடைமருதூர் கடுவெளி சித்தர் - ஆனந்த களிப்பு, இராவணகாவியம்.

பாடத் தயாரிப்பு

முனைவர். கி. மணிவாசகம்

# 5. சீறாப்புராணம்

இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் முதன்மையானக் காப்பியம் சீறாப்புராணமாகும். சீறா+புராணம்= சீறாப்புராணம். ‘சீறா’ என்ற சொல் ‘சீறத்’ என்னும் அரபிமொழிச் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். ‘சீறத்’ என்னும் சொல்லுக்கு வாழ்க்கை என்று பொருளாகும். நபிகள் நாயகத்தின் வரலாற்றைக்கூறும் காப்பியமாகும்” ‘புராணம்’ என்பது பழமையான வரலாறு என்று பொருள்.

| | |
|---|---|
| நூலாசிரியர்:- | உமறுப்புலவர் |
| காலம்:- | கி.பி. 1642-1703 |
| பிறந்த ஊர்:- | கீழக்கரை/நாகலாபுரம் |
| ஆசான்:- | கடிகை முத்துப்புலவர் |
| காப்பியப் கருபொருள் பெற்ற ஆசான்:- | செய்கு சதக்கத்துல்லா |
| உமறுப்புலவரை ஆதரித்தவர்:- | வள்ளல் சீதக்காதி<br>-பரங்கிப்பேட்டை அபுல்காசீம் மரைக்காயர் |

காப்பியப் பிரிவு-
மூன்று காண்டங்கள்:-

| | |
|---|---|
| 1. விலாதத்துக் காண்டம் (பிறப்பு)- | 24 படலங்கள் |
| 2. நுபுவத்துக் காண்டம் (தரிசனம்)- | 21 படலங்கள் |
| 3. ஹிஜிரத்துக் காண்டம் (பயணம்)- | 47 படலங்கள் |
| | 92 படலங்கள் |

| | |
|---|---|
| பா:- | விருத்தப்பா |
| பிற நூல்கள்:- | முதுமொழி மாலை |

நுபுவத்துக் காண்டம் என்னும் இரண்டாவது காண்டத்தில் உள்ள படலமே மானுக்குப் பிணை நின்ற படலமாகும். நபிகள் நாயகம் வேடனிடம் சிக்கிய ஒரு பெண்மானுக்காகத் தாமே பிணையாக நின்று, அம்மானை ‘வேடனிடமிருந்து மீட்ட பெருங்கருணைத் திறத்தை உணர்த்துவமே இப்படலமாகும்.

## சீறாப்புராணம் - மானுக்குப் பிணை நின்றபடலம்

1. குயினிழல் பரப்பச் செவ்விக்
 கொழுந்தொடை நறவம் சிந்தும்
வயிரவொண் வரையின் விம்மி
 வளர்ந்ததிண் புயத்து வள்ளல்
செயிரறு மறையின் றீஞ்சொற்
 செழுமழை பொழிந்து தீனின்
பயிர் வளர்ந் தேறச் செய்து
 பரிவுட னிருக்கு நாளில்

2. அரியினம் செறிந்த போன்ற
 அறபிகள் குழுவி னுப்ப
ணுருதனிச் சீய மொப்ப
 வுடையவன் றூதர் செல்வத்
திருநகர்ப் புறத்து நீங்கிச்
 செழுமுகின் முடியிற் றாங்கி
மருமலர் சொரியுஞ் சோலை
 சூழ்ந்ததோர் வரையைச் சார்ந்தார்.

3. கொன்றையுங் குருந்துங் கார்க்கோற்
 குறிஞ்சியும் வேயுந் தெற்றித்
துன்றிய நிழலு நன்னீர்
 சொரிதரு மிடமுஞ் செந்தேன்
மன்றலொண் மலரு நீங்கா
 வனந்திகழ் வரையின் கண்ணே
சென்றன ரெறிக்குங் காந்திச்
 செவ்விமெய் முகம்ம தன்றே.

4. வனந்திரி விலங்கு மாய்த்து
 வன்றசை வகிர்ந்து வாரித்
தினந்தொறுங் கோலிற் கோலி
 தீயிடை யமிழ்த்திக் காய்த்தித்
தனந்தனி யிருந்து தின்று
 தன்தசைப் பெருக்க லன்றி
யனந்தலிற் பொழுதும் வேறோ
 ரறிவென்ப தறிந்தி லானே.

5. காலினிற் கழலு நீண்ட
 கரியகா ளகத்தின் வீக்கும்
பாலினில் வலையுங் கையிற்
 பருவரைத் தனவுங் கூருங்

கோல்வெறி நணியுந் தோளிற்
　　கூன்பிறை வாளு மென்மை
வாலுடைப் பறவை சேர்த்துங்
　　கண்ணியு மருங்கிற் கொண்டோன்.

6. குறுவெயர்ப் புதித்த மெய்யுங்
　　கொழுந்தசை மணத்த வாயும்
பறிதலை விரிப்புங் கூர்ந்த
　　படுகொலை வழியு மாக
வறபினி லறபி வேட
　　னடவியிற் றொடர்ந்தோர் மானைக்
கறுவொடும் வலையிற் சேர்த்திக்
　　கட்டிவைத் திருப்பக் கண்டார்.

7. குழைகுழைத் தெறியுஞ் செந்தேன்
　　கொழுமலர்க் காவை நோக்கார்
பொழிமலை யருவி நோக்கார்
　　புறத்துநன் னிழலே நோக்கார்
செழுமுகிற் கவிகை வள்ளல்
　　செறிதரு மீந்தின் செங்காய்
மழையெனச் சொரிவ நோக்கார்
　　மானையே நோக்கிச் சென்றார்

8. அருளடை கிடந்த கண்ணு
　　மழகொளிர் முகமுஞ் சோதி
சொரிநறை கமழ்ந்த மெய்யுஞ்
　　சூன்முகிற் கவிகை யோடும்
வருவது தூயோன் றூதர்
　　முகம்மது வென்னத் தேறிப்
பருவர லுழக்கு முள்ளத்
　　தொடும்பிணை பகருமன்றே.

9. நெடியவன் றூதர் வந்தார்
　　வேடனா னிலத்தி னந்த
முடலுயிர்க் கிறுதி யில்லை
　　யுழையினத் தோடுஞ் சேர்ந்து
கடிதினிற் கன்றுங் காண்போ
　　மெனமுகம் மதுவைக் கண்ணா
னொடிவரை யிமைமூ டாம
　　னோக்கியே கிடந்த தன்றே.

10. பொருப்பிடைத் துறுகற் சார்பிற்
பொரியயரைத் தருவி னீழன்
மருப்புடைப் படலைத் திண்டோண்
மன்னவ ருடனும் புக்கி
நெருப்பிடைத் தசைவா யார்ந்து
நின்றவே டனையுஞ் செம்மான்
றிருப்புதற் கருங்கட் டுண்டு
கிடப்பதுஞ் சிறப்பக் கண்டார்.

11. இடைநிலத் துருக்கி விட்ட
விரசிதம் பரந்த தென்ன
மடிசுதை யமுதம் சிந்த
வடிக்கணீர் பனிப்பத் தேங்கு
முடலகந் துருத்தி யொப்ப
நெட்டுயிர்ப் புயிர்த்துக் காலிற்
றுடரொடுங் கிடப்பத் தூயோன்
றூதுவ ரடுத்து நின்றார்.

12. கொடியடம் பிலையை மானுங்
குளம்பின்மேற் சுருக்கும் புள்ளிப்
பொடியுடற் பதைப்பும் வீங்கிப்
புதையுநெட் டுயிர்ப்பு நோக்கி
நெடியவ னிறசூ லுல்லா
நெஞ்சுநெக் குருகிக் கானின்
பிடிபடு மானின் றன்பாற்
பேரருள் சுரப்ப நின்ருர்

13. கதிர்விரி கபீபு நிற்பக்
கானகத் தருக்க ளியாவும்
புதுமல ரலர்த்திச் செந்தேன்
பொழிவமான் வருத்த நோக்கி
விதிர்சினைக் கரங்கள் சாய்த்து
மென்றழைக் கூந்தல் சோர
மதியழிந் திரங்கிக் கண்ணீர்
வடிப்பன போன்ற தன்றே.

14. குலத்தொடும் பறவை தத்தங்
குடம்பையிற் புகுதன் மானை
நிலத்திடைக் கிடத்திக் கட்டி
நின்றவேட் டுவனைக் கண்ணா

னலத்தொடுங் காண்ப தாகா
தெனநடு நடுங்கி யுள்ள
முலைத்தறப் பெடையி னோடு
மொளிப்பன போன்ற தன்றே

15. ஏட்டலர் நறவ மாந்தி
யிருஞ்சுரும் பிசைக்குந் தோற்றம்
வாட்டமின் முகம்ம திங்ஙன்
வந்தனர் வருந்து மானை
மீட்டனர் வேட னீமான்
விரும்பினன் பயங்க ளர்த்தார்
கூட்டுறைந் தொளித்தன் மாற்று
மெனப்பல கூய போலும்

16. நிறைவளஞ் சுரந்த கானி
னின்றநந் நபியை நோக்கிக்
குறியவா லசைத்து நீண்ட
கொழுங்கழுத் துயர்த்தி நீட்டி
மறைபடா மதியே வண்மை
முகம்மதே என்னப் போற்றித்
தறுகிடா தெவர்க்குங் கேட்பச்
சலாமெடுத் துரைத்துக் கூறும்

17. வல்லவ னுண்மைத் தூதே
மன்னுமா னிலத்தின் மாந்த
ரல்லலை யகற்றி வேதத்
தறநெறி பயிற்றிச் சொர்க்கத்
தில்லிடை புகுத்தப் பூவி
னிடத்தினி லுதித்த கோவே
யொல்லையி னெனது சொற்கேட்
டுவந்தரு ளளிக்க வேண்டும்

18. என்னுயி ரெனநீங் காத
வினமுமென் கலையுங் கன்றுந்
துன்னிடத் திரண்டு பைம்புற்
றுறைதொறு மேய்ந்து நாளு
முன்னிய பசிக ளர்த்தோர்
மிருகங்கட் குயிர்கொ டாமன்
மன்னிய மலையின் சார்பு
மனப்பய மகற்றி வாழ்ந்தோம்

19. இருநிலத் தாசைக் காயோ
        ரிளங்கன்றென் வயிற்று றாதான்
    மருவிய கலையு நானும்
        வருத்தமுற் றிருக்குங் காலம்
    பெருகுதீன் முகம்ம தேநும்
        பெயரினைப் போற்றல் செய்தே
    னுருவமைந் திளஞ்சூன் முற்றி
        யுதரமும் வளர்ந்த தன்றே

20. தனியனென் னுயிருங் காக்குங்
        கலையுயிர் தானு மொன்றா
    யினிதினொன் றாய தென்ன
        விளங்கன்றொன் றீன்றே னின்ப
    நனிகழி கடலி லாழ்ந்து
        நறுமலை யிடத்திற் சேர்ந்து
    துனிபல வகற்றி னேன்முன்
        சூழ்வினை யறிகி லேனே

21. உள்ளுயி ரனைய கன்று
        மொருத்தலு மியானு மோர்நாள்
    வெள்ளமொத் தனைய மானி
        னினமுமோர் வெற்பின் சார்பி
    னள்ளிலை யள்ளி வாய்க்கொண்ட
        பரும்பசி தடிந்து நீருண்
    டெள்ளள வெனினு மச்ச
        மின்றிநின் றுலவு நேரம்

22. அத்திசைக் கெதிரின் மேல்பா
        லடுத்தொரு குவட்டின் கண்ணே
    மத்தகக் கரியு மாய்க்கும்
        வரிப்புலி முழக்க நீண்ட
    குத்திரத் தசனித் தாக்கின்
        குவலய மதிரக் கேட்டுத்
    தத்தியெத் திசையுந் திக்குந்
        தனித்தனி சிதறி னேமால்

23. கூடிய தூறும் பாரிற்
        குளித்திடக் குதித்து வல்லே
    யோடிய திசையி னொன்றை
        யொன்றுகான் கிலதா யானும்

வாடிய மனத்தி னோடு
மறியையு நோக்கா தாக்கை
யாடியிற் றுரும்பாய் வேறோ
ரடவியி னடைந்திட் டேனால்

24. அடவியி னடையுங் காலை
யவ்வுழைக் கரந்திவ் வேடன்
றுடரிடும் வலையைச் சுற்றிச்
சுருக்கிடப் புலிவாய்த் தப்பி
மிடலரி யுழையிற் சிக்கி
மிடைந்தென மிடைந்து செவ்வி
யுடலுயிர் பதைப்பத் தேம்பி
யுணர்வழிந் தொடுங்கா நின்றேன்

25. வலையிடத் துறைந்த தென்ன
மகிழ்ந்தெழுந் தோடி வந்து
நிலைபெற வடுத்துச் சாய்த்து
நின்றெனை நோக்கி யாகத்
துலைவுறும் பசிக்கின் றென்பா
லுற்றனை யென்னைக் கூறிச்
சிலைகணை நிலத்திற் சேர்த்தித்
தெரிந்தொரு பாசந் தொட்டான்

26. திருக்கற நாலு தாளுஞ்
செவ்விதிற் கூட்டி யங்கை
வரிக்கயி றதனாற் சுற்றி
மாறுகொண் டீழ்த்துக் கட்டிக்
கரிக்கர மென்ன நீண்ட
கரத்தினாற் றாங்கி முன்னச்
சுருக்கிய வலையை நீக்கித்
தோளினி லெடுத்துக் கொண்டான்.

27. கவைமுனைக் கோட்டுச் செவ்விக்
கலையுட லுயிரு மீன்ற
நவியுட லுயிரு மோர்மா
னிடன்கொண்டு நடப்ப தொத்துச்
சவிபுறந் தவழுங் கோட்டுச்
சார்பிலிவ் வனத்தின் கண்ணே
சுவையறு மொழியா னென்னைச்
சுமந்திவ ணிறக்கி வைத்தான்

28. கட்டுடன் கிடந்து நெஞ்சிற்
கவலையுள் ளழிந்து மாறா
நெட்டுயிர்ப் பெறிந்து சோர்ந்து
நிலத்திடைக் கிடக்கு நேரம்
வட்டவெண் கவிகை வள்ளல்
முகம்மது நபியே யும்மை
திட்டியிற் றெறியக் கண்டேன்
றிடுக்கமுந் தீர்ந்த தன்றே

29. எனவிவை யுரைத்துப் பின்னு
மெழினபி முகத்தை நோக்கி
மனநிலை வாக்கி னோடு
முகம்மதே என்னப் போற்றிப்
புனமுறை விலங்கின் சாதி
யாயினுந் தமியேன் புன்சொற்
றனையருட் படுத்திக் கேட்பீ
ரென்றுரை சாற்றிச் சாற்றும்.

30. இச்சிலை வேடன் கையி
னிறத்தலை யுளத்தி லெண்ணி
யச்சமுற் றுரைப்ப தன்றிவ்
வவனியிற் சீவ னியாவு
நிச்சய மிறத்த லல்லா
லிருப்பவை நிலத்தி னுண்டோ
முச்சகம் விளக்குந் தீனின்
முதன் முறை முறைமைச் சொல்லோய்

31. கலையெனைப் பிரிவி லாது
கண்ணிமை காப்பதென்ன
வலைவறக் காப்பச் சின்னா
ளவனியிற் கலந்து வாழ்ந்தேன்
குலவிய மறியு மீன்றேன்
குறித்தினி யிருப்ப தென்கொ
லிலைநுனிப் பணியி னாக்கை
யிறத்தலே நலத்தன் மன்னோ

32. அடவியிற் கிரியல் வீணி
லவதியுற் றிறந்தி டாமல்
வடிவுடைக் குரிசி லேநும்
மலர்ப்பதச் செவ்வி நோக்கிப்

படுபரற் கானில் வேடன்
        பசிப்பிணி தீர்ப்ப தாக
வுடலிறத் திடுத லெவ்வெவ்
        விறப்பினு முயர்ச்சி மேலோய்

33. வரிப்புலி முழக்கங் கேட்டு
        மானினஞ் சிதறித் தத்தந்
தரிப்பிட மறியா தொன்றுக்
        கொன்றுடன் சாரா தெங்கு
முரைப்பறி தென்னப் போந்த
        தாலென தொருத்த றேடி
யிரைப்பறா நெடிக்கான் போய்ப்போ
        யிருந்ததோ யிறந்த தேயோ

34. ஒல்லையி னோடி நீங்கா
        தொருத்தலின் றளவு மோந்து
புல்லினைக் கறியா நீரும்
        புசித்திடா திருந்து தேடி
யல்லலுற் றழுங்கிக் கண்ணி
        னருவிநீர் சொரிய வாடிப்
பல்லவ மொரியிற் புக்க
        தெனவுடல் பதைக்கு மன்றே

35. பிடிபடு மிதற்கு முன்னே
        மூன்றுநாள் பிறந்து புல்லின்
கொடிநுனை மேய்ந்து நீருங்
        குடித்தறி யாது பாவி
மடிமுலை யிரங்கிப் பாலும்
        வழிந்தது குழவி சோர்ந்து
படிமிசை கிடந்தென் பாடு
        படுவதோ வறிகி லேனே

36. கோட்டுடைக் கலையி னோடுங்
        கூடிற்றோ வலதோர் பாலின்
மீட்டதோ வினத்தைச் சேர்ந்து
        விம்மிநின் றேங்கிற் றோகான்
காட்டிடை புலிவாய்ப் பட்டுக்
        கழிந்ததோ வென்னைத் தேடி
வாட்டமுற் றலறி யோடி
        மறுகிற்றோ வறிகி லேனே

37. தேங்கிய பசியால் வாடித்
திரிந்ததோ விறந்த தோவென்
றேங்கிய வருத்த மல்லா
லிவ்விட ரதனி லாவி
நீங்குமென் றுள்ளத் துள்ளே
நெட்டுட லுடும்பி னாவி
தாங்கிய தரும வேந்தே
தவரன்று சரத மன்றே

38. மன்னிய கலிமா வென்னும்
வழிநிலை மாந்தரி யாரும்
பொன்னிலம் புகுதச் செய்யும்
புண்ணியப் புகழின் மிக்கோய்
கொன்னிலைச் சிலைக்கை வேடன்
கொடும்பசி தணிப்பே னென்றாட்
பின்னிய பிணிப்பு நீக்கிப்
பிணையென விடுத்தல் வேண்டும்.

39. விடுத்திரேற் கலையைச் சேர்ந்து
விழைவுறுங் கவலை தீரப்
படுத்தியென் னினத்துக் கோதிப்
பறழினுக் கினிய தீம்பால்
கொடுத்தரும் பசியை மாற்றிக்
குலத்தொடுஞ் சேர்த்து வல்லே
யடுத்தொரு கடிகைப் போதி
லடைவனென் றறைந்த தன்றே

40. மானுரை வழங்கக் கேட்டு
மனத்தினிற் கருனை பொங்கி
கானவேட் டுவனை நோக்கிக்
கன்றிடை வருத்தந் தீர்த்துத்
தான்வரு மளவு மியானே
பிணையெனச் சாற்றி நின்றார்
தீனெனும் பயிரைக் காத்துச்
செழும்புகழ் விளைக்குஞ் செம்மல்

41. பிரியமுற் றிரங்கிக் காட்டின்
பிணைக்கியான் பிணையென் றோது
முரையினைக் கேட்டு வேட
னொண்புயங் குலுங்க நக்கித்

தெரிதரு மறிவி னோடுஞ்
சினத்தொடுங் கலந்து தேர்ந்து
கருமுகிற் கவிகை வள்ளள்
கவின்முக நோக்கிச் சொல்வான்

42. முள்ளுடைக் கானி லேகி
முகமழிந் துச்சி வேர்வை
யுள்ளங்கா னனைப்ப வோடி
யுடலுலைந் தொன்றுங் காணா
விள்ளரும் பசியான் மீளும்
வேளையிடப் பிணையை நோக்கி
யொள்ளிழை வலையிற் றாக்கிப்
பிடித்திவ ணொருங்கு சார்ந்தேன்

43. பெருத்தான் றசையா லிற்றைப்
பெரும்பசி தவிர்த்த தென்று
னிருத்தியிங் கிருந்தே னந்த
விருமனக் களிப்பை நீக்கி
வருத்தமுற் றிடுஞ்சொற் சொன்னீர்
முகம்மதே யெவர்க்கு மிச்சொற்
பொருத்தம தன்று விண்ணு

44. கானிடைப் பிடித்த மானைக்
கட்டவிழ்த் தவணிற் போக்கின்
மானிடர் பாலின் மீட்டும்
வருவது முன்ன ருண்டோ
ஞானமு மறையுந் தேர்ந்தோர்
செய்யுளு நாட்டிற் றுண்டோ
ஊனமிடப் பிணைச்சொ லையா
வோதுவ தொழிக வென்றான்

45. என்னுறு பிணையாய்ப் போன
விரும்பிணை கடிகைப் போதி
னுன்னிடத் துறும்வா ராதே
லுன்பசி தீர்ப்ப தாகப்
பின்னிரண் டொன்றுக் கன்பாய்த்
தருகுவன் பேது றேலென்
றன்னவன் றனக்குச் சொன்னா
ராரணத் தமிர்தச் சொல்லார்

46. காரணக் குரிசில் கூறுங்
கட்டுரை செவியி னோர்ந்து
பாரினி லெவர்க்குந் தோன்றாப்
புதுமைபார்த் தறிவோ மல்லாற்
சார்பினிற் சாரா லொன்றுக்
கிரண்டுமே தருது மென்றார்
பேரினிற் பிணையாய்க் கொள்ளல்
கருத்தெனப் பெரிதுட் கொண்டோன்

47. கள்ளமுங் கரப்பு மாறாக்
கருத்தின னுயிர்கட் கென்று
மெள்ளள விரக்க மில்லா
வேட்டுவ ரினத்தி னுள்ளே
னுள்ளம தறிந்துங் கேட்டீ
ருரைப்பதென் னுயர்ந்த மேன்மை
வள்ளல்நும் மதுர வரய்மை
மறுத்திலேன் விடுத்தி ரென்றான்.

48. வேட்டுவ னுரைப்பக் கேட்டு
முகம்மது விருப்ப முற்று
வாட்டமுற் றிருந்த புள்ளி
மானிடத் திருந்து பாரி
னீட்டிய காலிற் சேர்த்த
துடரினை நெகிழ்த்துக் கானிற்
கூட்டுறாக் குழவிக் குப்பால்
கொடுத்திவண் வருக வென்றார்

49. இருந்துகான் மடக்கி நீட்டி
எழுந்துடன் முறுக்கு நீக்கி
மருந்தெனு மமுதத் தீஞ்சொன்
முகம்மதின் வதன நோக்கிப்
பொருந்திய கலிமா ஓதிப்
புகழ்ந்துடற் பூரிப் போடுந்
திருந்தவே டனையும் பார்த்துச்
சென்றது கானின் மானே

50. வெண்ணிலாக் கதிர்கான் றென்ன
மென்முலை சுரந்த தீம்பான்
மண்ணெலா நனைப்பச் சூழ்ந்த
வனமெலாந் திரிந்து தேடிக்

கண்ணினி லினங்கா ணாது
கலங்கியோர் வனத்தின் கண்ணே
யெண்ணரும் பிணையுங் கன்றுங்
கலையுட னினிது கண்ட

51. மலைவற வினத்து ளாகி
மனத்தினுட் கவலை நீக்கிக்
கலையினுள் வருத்தந் தீர்த்துக்
கன்றினை யணைத்து விம்மு
முலையினை யூட்டி மென்மை
முதுகுவா லடிநா நீட்டி
யலைதர வளைத்து மோந்து
வேட்கையை யகற்றிற் றன்றே

52. கன்றது வயிறு வீங்கச்
கதிர்முலை அமுத மூட்டி
நின்றதன் னினத்துக் கெல்லா
நெடிபடுங் கானி லோடி
வன்றிறல் வேடன் கையிற்
படும்வர லாறுந் தூதர்
வென்றிகொள் பிணையின் மீட்டு
விட்டது மோதிற் றன்றே

53. பிணையென வுரைத்த மாற்றம்
பிணைக்குல மனைத்துங் கேட்டுப்
பணைபடு கானி லுள்ளப்
பதைப்பொடுந் துணுக்கி நிற்பத்
துணையெனுங் கலையி னங்கஞ்
சோர்ந்துநெட் டுயிர்ப்பு வீங்கி
யணைதர வடுத்து நோக்கி
யாற்றுவான் றொடங்கிற் றன்றே

54. மாறுகொண் டவர்கை தப்பி
வந்தமா னினத்தின் சாதி
கோறலை விரும்பி முன்னு
நரர்கையிற் கூடிற் றுண்டோ
வேறுரை பகரேல் பார்ப்பை
வெறுத்துமுன் னினத்தை நீத்து
மீறெனப் போதல் வேண்டா
மெனுமுறை யியம்பிற் றன்றே.

55. இணைத்தென்னைப் பிணித்த வேட
னிதயத்துக் கியையப் பேசிப்
பிணைத்தன்னைப் பொருத்தி நின்றோர்
பெரியவன் றூத ரிந்தத்
திணைத்தலத் தறிவி லாத
சேதனைச் சாதி யன்றே
யணைத்துயி ரனைத்துங் காத்தற்
கவரல தில்லை யன்றே

56. என்னுயி ரதனை வேட
னிரும்பசிக் கியைய வீந்து
நந்நபி பிணையை மீட்ப
நன்மனம் பொருந்தி லேனாற்
பொன்னுல கிழந்து தீயு
நரகினிற புகுவ தல்லாற்
பின்னொரு கதியு முண்டோ
பிழையின்றிப் பெருமை யன்றே

57. சிறப்புடைக் குரிசின் முன்னஞ்
செப்பிய மாற்ற மாறி
மறப்பொடு மிருந்தே னாகில்
வரிப்புலி யினத்தின் வாய்ப்பட
டிறப்பதே சரத மல்லா
லிருப்பதற் கிடமற் றுண்டோ
வுறப்பெரும் விருப்ப மென்மே
லிருத்தலை யொழித்தல் வேண்டும்.

58. நதியிடைப் பெருக்கின் முன்னோர்
நவ்விபி னடக்கு நாளின்
மதியிலி யொருத்தன் வள்ளன்
முகம்மதின் வசன மாறிப்
புதியநன் னீரு ளாழ்ந்து
நொடியினில் வீந்து போய
வதிசய முலகில் விண்ணி
லியாவரே யறிகி லாதார்

59. ஈதெலா மறிந்து மென்னை
யவணிடை யிருத்தல் வேண்டி
யோதுநல் பழுதென் றோதி
யுழையின மனைத்துந் தேற்றிக்

காதலிற் கலையைப் போற்றிப்
கன்றினை யதன்பாற் சேர்த்திப்
பேதுற லெனப்பா லூட்டி
யெழுந்தது பிணையு மன்றே

60. இனத்தினை விடுத்து நீங்கி
யிருங்களிப் பிதயம் பூப்ப
வனத்தினி லேகுங் காலை
மறிமுன மறிப்பச் சீறிச்
சினந்தது தடுப்ப வோடிச்
செவ்விமான் முகத்தை நோக்கி
யினித்தவாய் புற்றீண் டாத
விளமறி யுரைக்கு மன்றே

61. மாதவம் பெற்று நின்போன்
முகம்மது நபிதஞ் செய்ய
பாதபங் கயத்தைக் கண்டு
பரிவுட னீமான் கொண்டு
போதலே யன்றி நின்னைப்
புறத்தினி லகற்றி வாழே
னீதுமுத் திரையென் றோதி
யெழுந்துமுன் குதித்த தன்றே

62. இறையவன் றூதைக் கண்ட
வதிசய மிதுகொ லென்ன
மறிமன மறுகி லாது
வதைதனைப் பொருந்திச் சேற
லிறுதியற் றின்ப நம்பா
லெய்துமென் றகத்தி லெண்ணிச்
செறிவனங் கடந்து வேடன்
றிசைதனை யடுத்த தன்றே.

63. குருளையும் பிணையும் கூடி
வருவது குறித்து நோக்கி
முருகலர் புயத்தார் வள்ளன்
முகம்மது மழ்கிந்தன் பாக
விருளுறு மனத்த னான
வேடனை யினிது கூவி
யொருபினைக் கிரண்டுன் பாலில்
வருவதென் றுரைத்திட் டாரால்

64. அன்னது கேட்டு வேட
னோக்கியன் புற்ற காலை
முன்னிய கன்று மானு
முகம்மதி னடியிற் றாழ்ந்து
பன்னிய சலாமுங் கூறிப்
பாவியெற் காக வேட்டு
மன்னிய பிணையை மீட்டு
மெனுமுரை வழங்கிற் றன்றே.

65. மாடுறைந் திவைமான் கூற
முகம்மது நபியும் விற்கை
வேடனை விளித்து நத்தம்
பிணையினை விடுத்து நின்றன்
பீடுடைப் பசியை மாற்றிப்
பெரும்பதிக் கடைக வென்றார்
வீடுபெற் றுயர்ந்து வாழ்ந்தே
னெனமலர்ப் பதத்தின் வீழ்ந்தான்

66. பாதபங் கயத்தைப் போற்றிப்
பருவர லகற்றி யாதி
தூதுவ ரிவரே யல்லா
லிலையென மனத்திற் றூக்கி
வேதநா யகமே யென்பால்
விருப்புறுங் கலிமாத் தன்னை
யோதுமென் றிருகை யேந்தி
யுவந்துநின் றுரைப்ப தானான்

67. கருமுகிற் கவிகை வேந்தே
கானக வேட னென்னு
முருவினன் விலங்கோ டொப்பே
னுள்ளறி வுணர் வுமில்லேன்
றெருளுறப் பாவி யென்னெத்
தீன்நிலைக் குரிய னென்னப்
பெரிதளித் திடுதல் நுந்தம்
பெருமையிற் பெருமை என்றான்

68. மதிமுகம் மகிழ்ச்சி கூர
முகம்மது கலிமாச் சொல்ல
விதயமுற் றோதி வேட
னினிதினி னீமான் கொண்டு

புதியனை வணங்கிச் செய்யுஞ்
 செய்தொழில் பொருந்தக் கேட்டு
நிதிமனைக் குரிய னாகித்
 தீனிலை நெறிநின் றானே

69. பெறுகதி நின்னாற் பெற்றேன்
 பெறும்பலங் களைந்தேன் மாறாத்
தெறுகொலை விளைந்து முன்னஞ்
 செய்தொழி றவிழ்த்தே னீயு
மறுகலை யெறிந்து தேறு
 மனக்கலை யொடுகன் றோடு
முறுகலை யிடத்திற் போய்ச்சேர்ந்
 தொழுகலை முயல்தி யென்றான்

70. வானவர் பரவுங் கோமான்
 முகம்மது மானை நோக்கிக்
கானகஞ் சென்னீ யென்றார்
 கமலமென் பதத்திற் றாழ்ந்து
தீனிலைக் குரிய வேடன்
 றன்னையுந் திருந்தப் போற்றி
நானிலம் புகலப் பாரி

 டைந்தினஞ் சேர்ந்த தன்றே
71. தேனைக்குங் குமங்கள் சிந்தச்
 செழித்ததிண் புயத்து வள்ளல்
கானைக்குவ் விடத்திற் காட்டுங்
 கமலமென் பதத்தைப் போற்றித்
தானைக்கும் பதிக்கு மியானே
 தலைவனென் பவர்போல் வேடன்
மானைக் கொண் டுவரப் போயி
 மானைக் கொண் டகத்திற் புக்கான்

72. துடவைநன் மலரைத் தூற்றுந்
 தூய்நிழ லிடத்தை நீத்திப்
படர்முகிற் கவிகை யோங்கப்
 பாருள தெவையும் வாழ்த்த
வடவரை யனைய திண்டோள்
 வயவர்க ளினிது சூழக்
கடிமனை யிடத்திற் புக்கார்
 கபீபிற சூலு மன்றே

## பொருளின் விளக்கம்

**1.** *வானில் தவழும் மேகம் குடையாக நிழலினைத் தரும். அழகு பொருந்திய செழுமிய மலர்மாலையிலிருந்து தேன் சிந்தும் படிக்கான உறுதி பொருந்திய மலையினும் பூரித்து நீண்ட வலுவான தோள்களுடைய நபிகள் நாயகம் (சல்) அவர்கள் குற்றமற்ற திருக்குர்ஆனின் இனிய வாக்கியம் ஆனது, வளத்தினைக் கொழிக்கும் மழையானது இடையறாது பொழிந்து இஸ்லாமியச் சன்மார்க்கமாகிய பயிரினை நாள் தோறும் ஓங்கி வளர்ந்து வரும் ஒரு நல்லநாள் பொழுதில்.*

**2.** *செம்மறி ஆடுகளின் கூட்டம் நெருங்கி வருவதைப் போல வந்த அராபியர்களின் கூட்டத்தின் மத்தியில் சிங்கத்தைப் போன்று இறைவனின் இறுதித் தூதுவராகிய நபிகள் நாயகம் (சல்) அவர்கள் செல்வச் செழிப்புடைய அழகிய நகர் புறத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். கரியமேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும் அழகிய மலையின் உச்சியில் நறு மணமுடைய மலர்கள் நிறைந்து காணப்படும் சோலைகள் சூழ்ந்த மலையின் கண் சென்று சேர்ந்தார்கள்.*

**3.** *மலையில் உள்ள அழகிய கொன்றை மரங்களும், குருந்தம் மரங்களும், மலைக்கோரைப் புற்களும், குறிஞ்சிக் கொடியும் ஓங்கி வளர்ந்த மூங்கிலும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து நிற்பதால் ஒள்ளிய நிழலைத் தந்துகொண்டிருந்தது. அவ்விடத்திலே நல்ல நீரினை சொரிந்து கொண்டுள்ள இடங்களும் தேவாமிர்தம் மிக்கத் தேன், அழகுடைய மலர்களும் நிறைந்திருக்கக் கூடிய அடர்ந்த காட்டுப் பகுதி அது. அந்த இடத்தினை நோக்கி அழகுடைய ஒளிவீசித் திகழும் மேனியினை உடைய நபிகள் நாயகம் சென்றார்கள்.*

**4.** ***காட்டினில் வேட்டுவன்:*** *அந்தக் காட்டில் விலங்குகளை வேட்டையாடி, அதன் தசையினைப் பிளந்து, அதனை குச்சியில் கோர்த்துக் கட்டி நெருப்பினில் காட்டிச் சுட்டு தான் மட்டும் தனியாக அமர்ந்து தின்று வந்தான். அந்த வேடன் தன் உடலைப் பெருக்கச் செய்வதையன்றி, தூங்கும்போது கூடவேறு ஒரு அறிவையும் அறிந்திடாதவன் ஆவான்.*

**4.** ***வேட்டைப் பொருட்கள்:*** *அந்த வேடனில் காலில் செருப்பும், நீண்ட கறுத்த நிறத்தால் ஆன ஈட்டி அல்லது சூலம் போன்ற ஆயுதத்தை இடையில் சேர்த்து இறுக்கிக் கட்டியிருந்தான். அதன் பாலில் வலையும் கையில் மலையில் விளைந்த முற்றிய மூங்கிலில்*

ஆன வில்லும், கூர்மையான அம்பும், கம்பும், தோளினில் அண்மையில் இளம்பிறை போன்ற தோற்றமுடைய அரிவாள் துலங்கிடக் காட்சியளித்தான். மென்மைத் தன்மையுடைய வாலினை உடைய பறவைகளைப் பிடிக்கும் கண்ணியும் இடையில் கட்டிக் கொண்டு சென்றான்.

5. **நபிகள் வேடனைக் காணுதல்:** குறைந்த உடல்வேர்வை தோன்றிய உடலும், கொழுத்த மாமிசத்தை உண்டதால் ஏற்பட்ட நாற்றத் தினையுடைய வாயும், முடிகள் அற்ற மொட்டைத் தலையினையும், மிருகங்களைக் கொல்லும் கூர்மையான கொடிய கொலைக் கண்களுமாக அந்த மலையின் கண் இருந்த வேடனைக் கண்டார். அந்த வேடன் காட்டினில் நெடுந்தொலைவு சென்று ஒரு மானை வேட்டையாடி உயிருடன் பிடித்து வலையின் உள்ளே சேர்த்துக் கட்டி வைத்திருந்தக் காட்சியினை நபிகளார் கண்டார்கள்.

7. **நபிகள் மானிடம் செல்லுதல்:** நபிகள் நாயகம் பரந்து விரிந்த காட்டினையும், சிவந்த தேன் மிகுந்த மலர்களை உடைய காட்டினையும் பார்க்கவில்லை ஓங்கிய மலையிலிருந்து வழிந்தோடிய அருவியினைப் பார்க்கவில்லை. இரண்டு புறத்திலும் உள்ள குளிர்ச்சியினையுடைய மர நிழலைப் பார்க்கவில்லை. செழித்த மேகம் குடைப் பிடிக்கும் தன்மையுடைய நபிகள் நாயகம் அடர்ந்த ஈச்சமரங்களின் காய்கள் மழையினைப் போன்று இடையறாது உதிர்வதைப் பார்ககவில்லை வலையினுள் கட்டுண்டுக் கிடந்த மானினை நோக்கிக் கொண்டே அதன் அருகினில் சென்றார்கள்.

8. **மான் தனக்குத் தானே பேசிக்கொள்ளுதல்:** உலக உயிர்களுக் கெல்லாம் அருளினை வாரி வழங்கும் கண்களோடு பிரகாசிகின்ற முகமும், ஒளிசிந்தும் மணம் கமழும் மேனியும், கருவுற்ற மேகம் குடைப் பிடித்திடவும் தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பது நபிகள் நாயகம் தான் என்பதை அறிந்த துன்பத்தை உழன்ற மனமுடைய அந்தப் பெண்மான் தெரிந்து கொண்டு தனக்குத் தானே உரை பகர்ந்திடலாயிற்று.

9. **கண் இமைக்காமல் நபிகளைப் பார்த்தல்:** உலகத்தின் யாவற்றுக்கும் முன்னுள்ள இறைவனின் இறுதித் தூதுவராகிய நபிகள் நயகம் அவர்களின் முன்வந்து நின்றார்கள். இனிமேல் வேடனாலும், உலகத்தில் உள்ள பிற உயிர்களாலும், நம் உடலுக்கும் உயிருக்கும் அழிவு என்பது இல்லை. இனிமேல் நம் இனமாகிய மான்களின் கூட்டத்துடன் கூடி மகிழ்ந்து சேர்ந்திட

*இயலும். நமது கன்றினையும் கண்டிடலாம் என்பதை நினைத்து நபிகள் நாயகம் அவர்களின் கண்களை இமைத்திடாமல் பார்த்தவாறு அந்தப் பெண் மான் கடந்தது.*

**10.** ***மானினை நபிகள் நாயகம் பார்த்தல்:*** *மலையின் மீதிருந்த வெட்டையான இடத்தில் உள்ள பாறையின் அருகே கொடி படர்ந்த ஒரு மரத்தின் நிழலின்பால் மணம் உடைய மலர் மாலையைத் தாங்கித் திகழும் உறுதியான தோளினை உடைய அராபியர்கள் உடன்வர அவ்விடத்திற்கு சென்று சேர்ந்தார்கள். அவ்விடத்தின்அருகே சுட்ட இறைச்சியை வாயில் அசைப் போட்டு சுவைத்தவனாக வேட்டுவன் நின்றிருந்தான். உடலை அசைத்திட இயலாத நிலையிலிருந்த கட்டுண்ட மானைக் கண்டார்கள்.*

**11.** *கட்டுண்டு கிடந்த மானின் மடியிலிருந்து வழிந்தோடிய பாலானது வெள்ளியை உருக்கிவிட்டு போன்று ஓடிக் கிடந்தது. அழகிய கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் கீழே வழிந்தோடிக் கொண்டிருந்தது. கட்டுண்ட களைப்பினால் உடலிலிருந்து மூச்சுக் காற்று வெளிப்படுவது நெடு மூச்சாக இருந்ததன் காரணமாக அதற்கு ஏற்ப வயிறானது உப்பியும், ஒட்டியும், வடிந்தும் துருத்தியை ஒத்துச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. கால்கள் இரண்டிலும் விலங்குகள் கட்டப்பட்டிருந்ததால் வருந்திக்கிடந்த மானின் அருகே இறைவனின் இறுதித் தூதுவர் சென்று நின்றார்கள்.*

**12.** ***பெருமானாரின் மன இரக்கம்:*** *அடப்பங்கொடியின் இலையினை ஒத்துக் காணப்படும் கால் குளம்பின் மீது சுருக்கிட்டுக் கட்டப் பட்டிருந்ததால் மானின் உடம்பு முழுவதும் சிறிய சிறிய வெண் புள்ளிகள் தோன்றியிருந்தன. அந்த மானின் அச்சம் அவ்வப் போது எழுந்து அடங்கிக் கொண்டிருந்தது. நெடுமூச்சினைத் தொடர்ந்து விட்டுக் கொண்டிருந்த மானின் நிலையினைப் பார்த்து இறுதித் தூதுவர் நபிகள் நாயகம் அவர்களின் மனம் வருத்த முற்று இரங்கியது. காட்டில் பிடிபட்ட மானின் அருகே கருணை மழை பெருக்கெடுத்து ஓடிட அதன் அருகினில் நின்றார்கள்.*

**13.** ***இயற்கை வருந்துதல்:*** *ஒளியினைப் பரப்பும் உடலினை உடைய நபிகள் நாயகம் அவர்கள் காட்டிலுள்ள கட்டுண்டுக் கிடந்த மானின் அருகில் இரக்கமுற்று நின்றார்கள். அதனைக் கண்ட காட்டிலுள்ள மரங்களிலுள்ள மலர்கள் அனைத்தும் மலர்ந்து*

*நற்தேனை வடித்துக் கொண்டிருந்தது. மான் படுகின்ற துன்பத் தினைக் கண்டு மலர்ந்த மலர்கள் அனைத்தும் தன் கரங்களைத் தாழ்த்தி மென்மையான இலைகள் என்னும் கூந்தலானது அவிழ்ந்து கீழ்நோக்கிப் படர்ந்திட நின்ற காட்சியானது பெண்கள் தலைவிரி கோலத்தில் கண்ணீர் வடித்து நிற்பதை ஒத்துக் காணப்பட்டது.*

**14. *பறவைகளின் செயல்கள்:*** *பறவைகள் தத்தம் கூட்டத்துடன் கூட்டிற்குள் சென்று ஒளிந்து கொண்டது. மானினை நிலத்தின் மீது படுக்க வைத்துக் கட்டிப் போட்டிருந்த வேடனை இனிமேல் கண்களால் விருப்பமுற்று பார்ப்பது ஆகாத செயல் என அச்சமுற்று நடுநடுங்கி, மன நிம்மதியின்றி தன் பெண்பறவை யினோடு கூட்டிற்குள் சென்று ஒளிந்து கொண்டிருந்தன.*

**15. *வண்டுகளின் செயல்:*** *அழகிய மலர்களிலிருந்து வடிகின்ற தேனினை உண்ட பெரிய வண்டுகள் ரீங்காரம் செய்யும் அக்காட்சியானது குறைகள் அற்ற நபிகள் நாயகம் (சல்) அவர்கள் இவ்விடத்திற்கு வந்துவிட்டார்கள். வேடனிடம் கட்டுக்கிடக்கின்ற மானை மீட்டிடுவார்கள். மானினைப் பிடித்து வேடனும் மனம் மாற்றம் அடைந்து ஓரிறையின் பக்கம் இணைந்திடுவான் இனிமேல் அச்சப்படத் தேவையில்லை என்று நினைத்து கூட்டினுள் மறைந்திருக்கும் பறவைகளே உங்களின் எண்ணங் களை மாற்றிக் கொள்ளுங்கள் என்று பலமுறை கூவியது.*

**16. *மான் நபிகளிடம் பேசத் தொடங்குதல்:*** *வளம் நிறைந்த காட்டில் நின்றிருந்த நமது நபிகள் நாயகம் (சல்) அவர்களைப் பார்த்து தன்னுடைய குட்டையான வாலினை ஆட்டி, நீண்ட சதைப்பற்று மிகுந்த தனது கழுத்தினை உயர்த்தி தலையினை நிமிர்த்தி, "மறைதல் இல்லாத பூரண சந்திரனே! செயல்திறம் மிக்க நபிகள் நாயகம் அவர்களே! என்பதாகக் கூறி அழைத்து இடைவிடாமல் யாவர்க்கும் கேட்கும் படியாக 'சலாம்' என்றும் முகமன் கூறியது.*

**17. *மானின் வேண்டுகோள்:*** *வலிமைமிக்க இறைவனின் உண்மையை விளக்கிட வந்த தீர்க்கத் தரிசியே! நிலைபெற்றுள்ள இவ்வுலகினில் மனிதர்களின் துன்பத்தினை அகற்றி, அருமறையாம் திருக்குர் ஆன் கூறுகின்ற நன்னெறியினைப் பயிற்றுவித்து, சொர்க்கத் திலுள்ள மாளிகையில் சேர்வதற்கு இப்பூமியின் கண் தோன்றிய பேரரசே! மிக விரைவில் என்னுடைய உரையினைக் கேட்டு, மனத்தினில் தேக்கி, என் பால் கருணை பொழிந்திட வேண்டும் என நபிகளாரிடம் விண்ணப்பித்தது.*

18. ***மான் தன் கதையினைக் கூறுதல்:*** *நபிகள் நாயகமே! என்னுடைய உயிருக்கு உயிரான என்னைவிட்டு என்றுமே நீங்காத ஆண்மானும், நான் ஈன்றெடுத்த என்னுடைய கன்றும், என் இனமாகிய மான்களின் கூட்டமும் நெருங்கி ஒன்று கூடி மலையிடத்தே உள்ள பச்சைப் புல்லினை கிடைக்கும் இடங்களில் எல்லாம் சென்று மேய்ந்து தினந்தோறும் சென்று உண்டு பசியினைப் போக்கினோம். எந்த ஒரு கொடிய விலங்குகளாலும் எங்களின் உயிர்களுக்கு அச்சம் ஏற்படாதவாறு மணத்தின் கண் அச்சம் அற்ற நிலையில் வாழ்ந்து வந்தோம்.*

19. ***மான் கருவுற்ற நிகழ்வு:*** *மிகப் பெரிய இந்த நிலத்தினில் நீண்ட நாட்களாக என் வயிற்றினில் எனக்குக் கன்று பிறந்திடவில்லை. அது குறித்து நானும் என்னுடைய துணை மானாகிய ஆண்மானும் கலையுற்றிருந்தோம். அந்தக் காலகட்டத்தில் நாளுக்கு நாள் தன் பயிரினை வளர்த்து வரும் நபிகள் நாயகமாகிய உங்களின் நற்பெயரினைத் துதித்திட்டேன். அதன் காரணமாக இளம் சூல் தோன்றி கர்ப்பம் உற்றேன். நான் கர்ப்பம் உற்றதை அறிவிக்கும் வகையில் எனது வயிறும் வளர்ந்து பெருத்தது.*

20. ***குழவியினை ஈன்றெடுத்தல்:*** *தனித்தவனாகிய இறைவன் காத்திடும் என்னுடைய உயிரும், எனது உயிராகிய கலைமானின் உயிரும் ஒன்றாய் இணைந்து இனிதுற கர்ப்பம் முற்றி ஒரு கன்றினை ஈன்றெடுத்தேன். இதனால் என் கவலை நீங்கி மகிழ்ச்சி என்னும் இன்பக் கடலில் மூழ்கி மலையிடத்தினில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தேன் என்னுடைய எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதை நான் அறிந்திருக்கவில்லை.*

21. ***மலையினில் உலவுதல்:*** *என்னுள் இயங்குகின்ற என் உயிரனைய கன்றும், நானும், என் ஆண்மானும், கடலினை ஒத்துக் காணப் படும் எங்கள் இன மிகப்பெரிய மானின் கூட்டமும் ஒருநாள் மலையிலுள்ள ஓரிடத்தில் நெருங்கி வளர்ந்திருந்த இலைகளைக் கடித்து உண்டு, கொடிய பசியினைப் போக்கி தண்ணீர் அருந்தி, ஒரு எள்ளின் அளவு கூட பயமின்றி உலாவிக் கொண்டிருந்தோம்.*

22. ***வேங்கைப் புலியின் ஓசை கேட்டல்:*** *ஒருநாள் நாங்கள் நின்றிருந்த திசைக்கு எதிர்புறத்தே இருந்த மலையின் உச்சியின் மீதிருந்து பெரிய தலையினையுடைய யானையையும் கொல்லவல்ல வேங்கைப் புலியின் நெடிய கர்ஜனையானது உலகம் அதிரும் படி பெரியதாகக் கேட்டது. அவ்வொலி கேட்ட நாங்கள் அவ்விடத்தை விட்டுத் தப்பிச் செல்வதற்காக நான்கு திசைகளிலும், எட்டுத் திக்குகளிலும் சிதறுண்டு ஓடினோம்.*

23. ***தப்பிக்க ஓடுதல்:*** *நான் புலியின் இடிகுரல் முழக்கத்திற்கு அஞ்சி உயிர் தப்பிப்பதற்காக விரைவாக ஓடிக் கொண்டிருந்த திசையில் ஒருமானை இன்னொரு மான் கண்டுகொள்ள முடியாத இயல்பினை உடையோம் ஆனோம். நான் அச்சத்தால் வாட்டமுற்ற மனத்தினை உடையவனானேன். அப்போது எனது கன்றை பார்த்திடாமல் எனது உடலானது காற்றில் சிக்கிய சிறு துரும்பைப் போல நிலைகொள்ளாமல் அதுவரை சென்றறியாத காட்டின் பக்கம் சென்றேன்.*

24. ***வலையில் சிக்குதல்:*** *அந்தப் புதிய காட்டினில் நான் சென்ற போது அந்தகாட்டினுள் மறைந்திருந்த வேடன் விரித்து வைத்திருந்த வலையில் மாட்டிக் கொண்டேன். உடனே சங்கிலித் தொடர் போன்று பின்னப்பட்ட வலையை வேடன் சுருக்கினான். புலியின் வாயிலிருந்து தப்பி வந்து துன்பம் விளைவிக்கின்ற சிங்கத்திடம் அகப்பட்டு கொண்டதைப் போல வருந்தினேன். அதனால் என் உடலும் உயிரும் நினைவிழந்தது. உடல் முழுவதும் ஒடுங்கியது.*

25. ***வேடனின் மகிழ்ச்சி:*** *வேடன் விரித்த வலையில் நான் மாட்டிக் கொண்டதை அறிந்து வேடன் மனம் மகிழ்ந்தான். தான் மறைந்திருந்த இடத்திலிருந்து எழுந்து வந்து என் அருகில் வந்தான். என் உடலை சாய்த்துக் கிடத்தி இன்றைய என்னுடைய பசிக்கு உணவாகக் கிடைத்தது என்று கூறி மகிழ்வுற்றான். தன் கையில் வைத்திருந்த வில், அம்பு ஆகிய இரண்டையும் நிலத்தின் மீது வைத்துவிட்டு, ஒரு உறுதியான கயிறு ஒன்றினை தன்னுடைய கையில் எடுத்தான்.*

26. ***மானினைக் கட்டுதல்:*** *கையில் எடுத்துக் கொண்ட கயிற்றின் முறுக்கினை அகற்றினான். மானின் நான்கு கால்களையும் கயிற்றினால் இறுகக் கட்டினான். தன்னுடைய கைகளால் வரிந்து மாறி மாறி இறுகக் கட்டிக் கொண்டான். யானையின் தும்பிக்கையினைப் போன்ற நீண்ட தன்னுடைய கைகளால் தாங்கிப் பிடித்து முன்னர் சுருக்கிக் கட்டிய வலையிலிருந்து விடுவித்தான். விடுவித்த மானினை தன் தோளின் மீது தூக்கி வைத்துக் கொண்டான்.*

27. ***பெண்மானின் கூற்று:*** *கொடுமையான மொழியினைக் கூறும் வேடன் நீண்ட கொம்புகளை உடைய அழகுமிளிர்கின்ற ஆண்மானின் உடலையும், உயிரையும், தான் ஈன்றெடுத்த கன்றின் உடலையும் உயிரையும், ஒரு மனிதன் பற்றிக் கொண்டு நடப்பதைப் போன்று நடந்து சென்றான். அழகுடைய உயர்ந்த*

*சிகரத்தினை உடைய மலையின் பக்கத்தில் கொடிய உரையினைக் கூறும் இந்த வேடனானவன் என்னைத் தோளில் சுமந்து வந்து இவ்விடத்தில் இறக்கி வைத்தான்.*

28. ***மான் நபிகளைப் பார்த்தல்:*** *கயிற்றினால் கட்டப் பட்டுக் கிடந்த மான் கவலையினால் மனம் சோர்வுற்றது. நெடுமூச்செறிந்து நிலத்தினில் கிடந்தது. அந்நேரத்தில் வட்ட வடிவிலான வெண்மை நிறமுடைய குடையுடைய வள்ளன்மை மிக்க இறைவனின் தூதுவராகிய தாங்களை மலை முகட்டின் மீது ஏறி வருவதினைக் கண்டேன். அந்த நேரத்திலிருந்து என் மனதிலிருந்த அச்சம் நீங்கியது என்று பெண்மான் கூறியது.*

29. ***மான் முகம்மது நபியைத் துதித்தல்:*** *முகம்மது நபியின் அழகுறும் வடிவத்தைப் பார்த்து அமைதியுற்றதால் தெளிந்த சொற்களால் மேலும் கூறியது. முகம்மது என்னும் திருநாமம் உடையவர்களே! எனப் போற்றிப் புகழ்ந்தது. புற்கள் நிறைந்த புன்செய் நிலத்தினில் வாழ்கின்ற விலங்கினத்தைச் சார்ந்தவன் ஆயினும் "பெரும் துன்பத்தால் அவதியுறும் எனது தாழ்வான உரையினை கேட்டிடல் வேண்டும் எனக் கூறி பேசத் தொடங்கியது.*

30. ***மான் முகம்மது நபிகளிடம் பேசுதல்:*** *மூன்று உலகத்தினருக்கும் சன்மார்க்க நெறியினை விளக்கி உரைக்கின்ற மேலான திருக்குர் ஆனின் வசனத்தை அழகுற எடுத்துரைக்கும் நபிகள் நாயகமே! இவ்வுலகத்தினில் தோன்றிய உயிரினங்கள் அனைத்தும் மரணிப்பது உறுதி. இதனைத் தாண்டி இப்பூமியில் நிலைத்து வாழக்கூடியது எதுவும் இப்பூமியில் இல்லை. கையில் வில் அம்பினை ஏந்தியுள்ள இந்த வேட்டுவனின் கைகளால் இறந்துபடுவதை மனத்தின் கண் நினைத்து அச்சமுற்று உரைத்திடுவதை எண்ணிடாமல் எனது உரையினை அருள் கூர்ந்து கேளுங்கள் எனக்கூறியது.*

31. *ஆண்மானது என்னை ஒருபொழுதும் பிரிந்திடா வண்ணம் இமை கண்களைக் காப்பது போல் என்னைத் துன்பம் சூழ்ந்திடா வண்ணம் பாதுகாத்து வந்தது. இவ்வுலகினில் சிலகாலம் இன்பம் துய்த்து வாழ்ந்து மகிழ்ச்சியில் இருந்தோம். கன்றில்லாதக் குறையைப் போக்கும் வண்ணம் அழகிய கன்றையும் பெற்றேன். வாழ்க்கையின் லட்சியம் அவ்வளவு தானே? அருகம்புல்லின் இலை நுனியில் ஒட்டிய சிறு துளி அளவு இந்திரியத்தால் ஆனது இவ்வுடம்பு ஆகும். இத்தகைய இவ்வுடம்பு இவ்வுலகின் கண் இருந்து என்ன காணாத சுகத்தினைக் கண்டுவிடப் போகிறேன்? இந்த நல்ல நிலையில் 'நான் இறந்து படுதலே மேல் என' முகம்மது நபியைப் பார்த்து பெண்மான் கூறியது.*

**32**. *பெரும் அழகுடைய நபிகளுக்கு அரசே! காட்டினில் மலையினில் பயனின்று துன்பப்பட்டு இறந்து படாமல் உங்களுடைய தாமரை மலரினை ஒத்த திருப் பாதங்களின் அழகினைக் கண்குளிர கண்டு, சிறு கற்கள் நிறைந்த காட்டிடத்தே இவ்வேடனின் கொடிய பசிப்பிணியினைத் தீர்த்திடும் வகையில் என் இறப்பு அமைவதை மேலெனக் கூறியது.*

**33.** *உடல் முழுவதும் கோடுகள் படர்ந்த வேங்கைப் புலியின் முழக்கத்தினைக் கேட்டு மான்களின் கூட்டமானது உயிர் பிழைப்பதற்காகத் தனித் தனியாகப் பிரிந்து சென்றோம் மீண்டும் எங்களுடைய தங்குமிடம் சென்று சேர்ந்திடாது பிரிந்து சென்ற கூட்டம் ஒன்று பட்டதோ, இல்லையோ? அப்படி பிரிந்து ஓடிய எனது துணைமானாகிய ஆண்மான் என்னைத் தேடி காடெங்கும் கூவி அழைத்துத் திரிந்தலைந்து கொண்டிருக்கிறதோ அல்லது இறந்து விட்டதோ? யாதொன்றும் அறிந்திலேன் எனக் கூறியது.*

**34.** *இது நாள் வரையில் என்னைவிட்டுப் பிறிந்தறியாத எனது ஆண்மானது புற்களை நுகர்ந்து கடித்திடாமல், தண்ணீரும் குடித்திடாமல் பசித்தும், தாகித்தும் என்னை அலைந்து தேடி அவதியுற்று, நொந்து கண்களில் அருவிபோல் நீர்கொட்டிட உடல் வாட்டமுற்று, இளம் தளிரானது நெருப்பினில்பட்டது போல் உடல் வாடிபோய் இருக்கும்.*

**35.** *இந்த வேடனிடம் நான் பிடிபடுவதற்கு மூன்று நாள்கள் முன்பு தான் என் கன்று இவ்வுலகினில் பிறந்துள்ளது. அந்தக் கன்றிற்கு கொடிகளின் கொழுந்தினையும், தண்ணீரையும் கூடப் பருகிடக் கூடாது. எனது கன்று இப்பூமியின் மீது நடக்க இயலாததாகிக் கிடந்தது. அதன் நிலை என்ன ஆயிற்றோ? அதன் நினைவால் இரக்கமுற்ற என் மடி தளர்ந்து மார்புக்காம்பின் வழியாக பால் சுரந்து கீழே வடிந்து ஓடுகின்றது.*

**36.** *என்னுடைய இளங்கன்றானது கொம்புகள் உடைய ஆண் மானுடன் சேர்ந்ததோ? அல்லது தனித்தே இன்னொரு பக்கத்தே சேர்ந்ததோ? தனது இனமாகிய மான்களுடன் சென்று சேர்ந்து என்னைக் காணாமல் ஏங்கி நிற்கிறதோ? காட்டாறு பாய்கின்ற காட்டின்பால் புலியின் வாயில் அகப்பட்டு அதற்கு இரையாகி மடிந்ததோ? மேலும் என்னைத் தேடி அலைந்து திரிந்து ஏங்கீற்றோ? காடெங்கும் ஓடி திகைப்பிற்கு உள்ளாகியதோ? அறியவில்லையே என்று கூறியது.*

*37.* *எனது கன்றானது பசியின் மிகுதியால் வாட்டமுற்று அலைந்து திரிகிறதோ? அல்லது இறந்துபட்டதோ என்பதே என்னுடைய வருத்தமாகும். இந்த வேடனின் பால் அகப்பட்டுள்ளதால் என்னுடைய உயிர் பிரிந்து போய்விடுமோ என்ற அச்ச உணர்வு எனக்கு இல்லை. நீண்ட உடலையுடைய உடும்பின் உயிரை ஒரு வேடனிடம் இருந்து மீட்டு உதவிய தருமத்தின் காவலரே! நான் கூறிடும் இக்கூற்றானது முற்றிலும் உண்மையாகும்.*

*38.* *புகழ்தற்குரிய இஸ்லாமிய மூல மந்திரமாகிய ‘இறைவன் ஒருவனே’ என்ற தலைமை மந்திரத்தை நம்பிய சன்மார்க்க நெறியில் நிற்பவர்கள் அனைவரையும் சொர்க்கலோகத்தின் பக்கம் அழைத்துச் செல்லும் புண்ணியரான புகழினை உடைய நபிகள் நாயகம் அவர்களே! கொலைக் கருவியான வில்லையும் அம்பையும் கையில் தாங்கி நிற்கும் இந்த வேடனின் கொடிய பசிக்கு நான் உணவு ஆகிடதற்குத் தயாராக உள்ளேன். அதற்கு முன்னர் நான் செய்ய வேண்டிய ஒரு செயல் உள்ளது. என் கால்களில் கயிற்றினால் கட்டப்பட்டுள்ள கட்டினை அவிழ்த்து எனக்குத் தாங்கள் பொறுப்பாகி என்னை விடுவித்தல் செய்ய வேண்டும் என்றது.*

*39.* *என்னைத் தாங்கள் பொறுப்பாக நின்று விடுவித்தீர்கள் என்றால் என்னுடைய துணையாகிய ஆண்மானிடமும் என் இனத்தினையும் கண்டு மகிழ்ந்து கவலை தீர்ந்த நிலையில் எனது கன்றினுக்குச் சுவையினையுடைய எனது மடிப்பாலைக் கொடுத்து அதன் அரிய பசியினை நீக்குவேன். என் இனமான்களிடத்தில் என் கன்றினைக் கவனித்துக் கொள்ளுமாறு சேர்த்துவிட்டு, என்னைக் காணாமல் கலக்கமுற்ற ஆண்மானின் கலக்கத்தினையும் போக்கிய பிறகு இங்கு ஒரு நாழிகைப் பொழுதினில் வந்துவிடுவேன் என்று கூறுயது.*

*40.* ***வேடனிடம் நபிகள் கூறியது:*** *இஸ்லாம் என்னும் சன்மார்க்க நெறியினை நாளுக்கு நாள் வளர்ந்தோங்கிடச் செய்யும் செழுமைமிக்க புகழினையுடைய நபிகள் நாயகம் அவர்கள் மான் உரைத்த வாசகம் கேட்டார்கள். மனத்தின் கண் இரக்கம் பொங்கி மேலிட்டது. அதனால் வேட்டுவனிடம் இந்த மானானது தனது கன்றிற்கு ஏற்பட்டுள்ள வருத்தத்தைப் போக்கிய பின் அது திரும்பி வந்திடும் வரை நான் உன்னிடம் அந்த மானுக்குப் பிணையாக நின்றிருக்கின்றேன் எனக் கூறினார்கள்.*

*41.* ***வேடனின் கூற்று:*** *அந்த மானின் மீது பாசம் கொண்டு, இரக்கமுற்று காட்டில் திரிகின்ற மானிற்காக நான் பிணையாக*

*நிற்கின்றேன் எனக் கூறிய சொல்லினைக் கேட்ட வேடனானவன் தனது வலிமையுடைய தோள்கள் குலுங்கிடும்படி சிரித்து அறிவும், கோபமும் இரண்டற கலந்தனவாகி நபிகளைப் பார்த்து பேசத் தொடங்கினான். பின்னர் ஒரு முடிவிற்கு வந்தவனாகிய வேடன் நபிகளின் முகத்தினை நோக்கி கூறத் தொடங்கினான்.*

**42.** ***மானினைப் பிடித்த கதை:*** *முட்கள் நிறைந்த இந்த காட்டினுள் சென்று, உச்சியில் தோன்றிய வியர்வை முகத்தின் வழியாக வழிந்தோடி உள்ளங்கால் வரை நனைத்தது. இக்காடு முழுவதும் ஓடித் திரிந்து உடல் வருத்தமுற எந்த ஒரு மிருகத்தினையும் காணாத நிலையில் கொடிய பசியுடன் திரும்பி வரும் பொழுதினில் இந்த மானினைக் கண்டேன். அதனை வெண்மை நிறமான நூல் வலையினுள் விழுமாறு செய்து, அதனைப் பற்றிப் பிடித்துத் தூக்கிச் சுமந்து இவ்விடம் வந்து சேர்ந்தேன்.*

**43.** *முகம்மது என்னும் புகழிற்குரிய பெயரினைக் கொண்டவர்களே விண்ணுலகிலும் மண்ணுலகிலும் புகழப்படும் தன்மையினாலும் யாவரிலும் மேலானவர்களே! பருத்த இந்த மானின் இறைச்சியால் இன்றைய என்னுடைய பெரும்பசியானது நீங்கிடப் போகிறது என்று என் மனதில் நினைத்தேன். அதனால் இவ்விடத்தினில் தங்கினேன். அப்படிப் பட்ட என்னுடைய மனமகிழ்வை நீங்கிடச் செய்யுமாறு வருத்தச் செய்கின்ற சொல்லினைச் சொன்னீர்கள். இந்தச் சொல்லானது எனக்கு மட்டுமல்லாது உலகினில் உள்ள யாருக்குமே ஏற்புடைய சொல்லாக இல்லை என்றான் வேடன்.*

**44.** *மேன்மை மிக்க நபிகள் நாயகமே! காட்டினில் இருந்து பிடித்து வந்துள்ள மானின் கட்டுகளை அவிழ்த்து மீண்டும் காட்டிற்குள் போகவிட்டால் மனிதர்களிடத்தில் மீண்டும் வந்ததாக முன் நிகழ்வுகள் உண்டா? அறிவிலும் வேதங்களிலும் ஞானமுடைய வர்கள் சொன்ன சொற்கள் ஏதேனும் உண்டா? இக்கூற்று குறையுடையதாகும். மானுக்காக நான் பிணை நிற்கின்றேன் என்னும் சொல் கூறிடுவதை விட்டிடுக! என்று வேடன் உரைத்தான்.*

**45.** ***நபிகளாரின் பதிலுரை:*** *எனது பொறுப்பில் இந்த மானை நீ அனுப்புக. இந்தப் பெண்மான் ஒரு நாழிகை பொழுதினில் உன்னிடத்தில் மீண்டு வந்துவிடும். அவ்வாறு வாராது போனால் உன்னுடைய பெரும்பசியினைப் போக்கும் படியாக ஒரு மானுக்குப் பதிலாக நீ மகிழ்ச்சியடையும் விதத்தில் இரண்டு மான்களைத் தந்திடுவேன். மனம் பேதலிப்பின்றி அந்த வேடன்*

*தனக்கு திருமறையின் வேத வசனங்களை தெளிவாக எடுத்துரைக்கும் நபிகள் நாயகம் அவர்கள் உறுதி உடன் சொன்னார்கள்.*

**46.** ***வேடனின் சிந்தனை:*** *உலகினில் அற்புதங்களை நிகழ்த்த வல்ல நபிகள் நாயகம் கூறிய சொற்களைக் கேட்டு, மனத்திற்குள் சிந்தித்து வேடன் ஒரு முடிவுக்கு வந்தான். நபிகள் நாயகம் அவர்களைப் பிணையாக ஏற்று இம்மானினை காட்டிற்குள் அனுப்பினால் அவர்களே உரைத்திடும் வண்ணம் அது திரும்பி வந்திடுமாயின் உலகினில் யாரும் காணமுடியாத அற்புத நிகழ்வினைக் கண்ட பெறும் பேற்றினை நாம் பெறுவோம். மான் திரும்பி வந்திடாவிட்டால் இரண்டு மான்களைத் தருவதாக நபிகளே ஒப்புக் கொள்கிறார்கள். எனவே எவ்வகையிலும் மானுக்குப் பிணையாகக் நிறுத்திக்கொண்டு அவிழ்த்து விடுதல் பயனுடையதே என வேடன் மனதிற்குள் நினைத்தான்.*

**47.** *மேன்மை பொருந்திய உலக உயிரினங்களுக்கு உதவுகின்ற நபிகள் நாயகம் அவர்களே! வஞ்சகமும், ஒளிந்து உறைதலும் மாறாத மனத்தினை உடையவன் நான். உயிர்களிடத்தில் எந்த நாளிலும் எள் அளவாவது இரங்கும் குணமற்ற வேடர்கள் குலத்தில் பிறந்துள்ளேன். என் உள்ளத்தின் இயல்பு தெரிந் திருந்தும் மானை விடுமாறு கூறுகின்றீர்கள். உங்களின் இனிய உரைக்கு மறுமொழி பகர்ந்திடேன்! கட்டுண்டுக்கிடக்கின்ற மானினை நீங்களே விடுவிப்பீர்களாக! என்று கூறினான்.*

**48.** ***மானின் கட்டுகளை நபிகளார் அகற்றுதல்:*** *மானினைத் தங்களின் திருக்கரத்தால் அவிழ்த்து விடுக என்ற உரையினைக் கேட்ட நபிகள் நாயகம் (சல்) அவர்கள் அவன் உரையின்பால் விருப்பம் உற்று சோர்வுற்றுக் கிடந்த மானின் அருகினில் சென்று அமர்ந் தார்கள். பூமியில் நீட்டப்பட்டிருந்த கால்களில் கட்டப்பட்டிருந்த கட்டினை அவிழ்த்து விட்டார்கள். நீ சென்று உனது கன்றினுக்குப் பாலினைக் கொடுத்து விட்டு விரைந்து வருவாயாக! என்று மானிடம் நபிகள் நாயகம் கூறினார்கள்.*

**49.** *நபிகள் நாயகம் மானின் கால்கட்டை அவிழ்த்து விட்டதினால் பூமியில் நீட்டியிருந்த கால்களை மடங்கி இருந்து, எழுந்து தன் உடல் சோர்வைப் போக்கிக் கொண்டு காட்டிற்குள் செல்லும் போது, மருந்து என்னும் படியான அமுதம் நிகர்த்த இனிய சொல் பேசுகின்ற நபிகள் நாயகத்தின் முகத்தினைப் பார்த்து, இஸ்லாமிய மூல மந்திரமான 'இறைவன் ஒருவனே' என்ற*

*கலிமாவை உச்சரித்தும், நபிகள் நாயகத்தைப் புகழ்ந்தவாறும் மன மகிழ்ச்சியுடன் வேடனையும் நோக்கியவாறு காட்டிற்குள் மான் சென்றது.*

**50.** ***கன்றினைத் தேடுதல்:*** *வெண்மைத் தன்மையுடைய நிலாவின் ஒளிக்குழம்பினைப் போன்ற மெல்லிய மார்புக் காம்பு நிரம்பிய இனியபால் பூமியினை நனைத்திட மான் வனத்திலுள்ள காடு முழுவதும் தன்னுடைய கன்றினைத் தேடியது. கண்ணின் பார்வையில் மான் கூட்டத்தினைக் காணாமல் மனக்கலக்கமுற்று நின்றது. அந்த வனத்தின் ஒரு பக்கத்தில் தன் துணைமானாகிய ஆண்மானையும், கன்றினையும், தன் இன மான்களையும் கண்டது.*

**51.** ***கன்றிற்கு அமுதூட்டல்:*** *மான்கள் அகன்றிட தன் இன மான்களின் கூட்டத்தினுள் சென்று, மனத்தில் உண்டாகிய கவலையைப் போக்கியது. தன் ஆண்மானின் அகத்திலிருந்த கவலையைப் போக்கியது. தனது கன்றினை தன்னருகில் அணைத்து, மடிக்காம்பினை கன்றின் வாயினுள் செலுத்தி பாலீந்து குடித்திடச் செய்தது. மென்மைத் தன்மையினை உடைய முதுகுப் புறம், வால், கீழ், நாக்கினை நீட்டி சுழன்று வந்து, கன்றின் மேனியை நுகர்ந்து தனது வேட்கையைப் போக்கியது.*

**52.** ***மான்கள் கூட்டத்திடம் பேசுதல்:*** *தன் கன்றிற்கு வயிறானது புடைத்து வீங்கும் படி மடியிலிருந்து ஒளித்தாரையென வெளிப்படும் பாலினை அருந்திடக் கொடுத்தது. அங்கு குழுமியிருந்த தன் இனமான் கூட்டத்திற்கு எல்லாம், மிகப்பெரிய காட்டினில் ஓடும் போது கொடுமைகள் செய்வதில் வல்லவனான வேடன் கையில் சிக்கித் துன்பம் அனுபவித்த வரலாற்றினையும், நபிகள் நாயகம் அவர்கள் பிணைநின்று தன்னை விடுவித்ததையும் எடுத்துக் கூறியது.*

**53.** ***மான் கூட்டத்தின் மனக்கலக்கம்:*** *நபிகள் நாயகம் அவர்கள் தான் திரும்பிச் செல்லும் வரையில் பிணையாக நிற்கின்றார்கள் என்ற பெண்மானது கூறியது கேட்ட மான் கூட்டம் அனைத்தும் அச்சம் கொண்டன. மூங்கில் நிறைந்த காட்டினில் உள்ள மானது பதை பதைக்க அஞ்சி நடுங்கின. தன் துணையாகிய ஆண் மானினது உடல் சோர்வுற நெடுமூச்சு எடுத்தது. பினனர் பெண்மானின் அருகில் சென்ற ஆண்மான் ஆறுதல் கூறத் தொடங்கியது.*

54. ***ஆண்மானின் உரை:*** *நம்மை கொல்வதற்காகப் பிடித்து வைத்திருந்தோரிடம் இருந்து விடுபட்டு வந்த மானினம் ஆகிய நம் கூட்டத்தில் கொலைபடுவதை தானாக ஏற்று மீண்டும் நாம் அங்கு சென்று சேர்வது என்ற பழக்கம் இல்லை. நீ அங்ஙனம் சென்று சேர்வதாக உரைக்காதே. கன்றினை விட்டு நீங்கியும், உன்முன் நிற்கும் நம் இனமான்களைப் பிரிந்து இறந்து படுவதற்குச் சென்றிட வேண்டாம் என ஆண்மான் பெண்மானிடம் உரைத்தது.*

55. ***நபிகளின் பெருமையினைப் பெண்மான் கூறுதல்:*** *என்னுடைய நான்கு கால்களையும் ஒருசேர இணைத்து என்னை இறுகக் கட்டி வைத்திருந்த வேடனின் மனம் மகிழும் படி இனிமையான முறையில் எடுத்துரைத்து, எனக்குப் பதிலாகத் தன்னைப் பகரமாக்கி நிற்கின்றவர்கள் இறைவனின் இறுதித் தூதுவராகிய நபிகள் நாயகம் (சல்) ஆவார்கள். அப்பரந்த பெரிய உலகத்தில் பகுத்தறிவு அற்ற உணர்ச்சியுள்ள பிரிவுகள் அல்லாத அனைத்து உயிர்களையும் அன்புடன் அரவணைத்துக் காப்பதற்கு இவ்வுலகினில் இறைவனைத் தவிர்த்து நபிகள் நாயகம் ஒருவர் மட்டுமே என்றுரைத்தது.*

56. *எனது ஆருயிரினை வேடனின் கொடிய பசிக்கு ஈந்து எனக்காகப் பிணையாக நிற்கும் நபிகள் நாயகம் (சல்) அவர்களை அப்பொறுப்பிலிருந்து மீட்பது எனது கடமையாகும். அப்படி நான் செய்யவில்லை ஆயின் சுவனப் பேற்றை இழந்து விடுவேன். நரகத்தில் புகுந்து தீயும் எரித்திடும். எனக்கு நற்கதியும் கிடைக்காது. அவ்வாறு தவறு செய்வது பெருமையுடைய செயலும் அன்று எனப் பெண்மான் உரைத்தது.*

57. *வானத்திலும், மண்ணிலும் வாழுவன, வாழுவோர் அனைவரிலும் மேம்பட்ட சிறப்பிற்குரியவரான நபிகள் நாயகம் முன்பாக நான் உரைத்த வார்த்தையை மாற்றியோ, மறுப்பதோ அன்றியும் அதற்கு மாற்றமாக நினைப்பதோ செய்தவன், ஆனால் அந்த வேடனிடமிருந்து ஒருவேளை தப்பிக்கலாம். ஆனால் காட்டினில் வாழும் புலியினத்தை ஒத்த பகை மிருகங்களுக்கு இறையாகிடாமல் இருந்திடுவேன்? என்று சொல்லிட முடியுமா? இவ்வுலகினில் வாழ எண்ணுகின்ற பேராசையை மேலும் மேலும் பெருகி நிலைபெறுவதை குறைத்துக் கொள்ள வேண்டும் என்றது பெண்மான்.*

58. *முன்னர் ஒரு நாள் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிய காட்டு ஆற்றினைக் தன் தோழர்களுடன் சேர்ந்து கடந்து செல்லும் ஒரு நாளில் நபிகள் நாயகம் சொல்லினைக் கேட்காமல் தன்*

*வழியில் ஆற்றைக் கடக்கமுயன்றான். ஒரு நொடிப் பொழுதினில் புதியதாக காட்டாற்றில் மேலும் அதிகரித்து ஓடிவர நீரினில் மூழ்கி இறந்து போனான். இந்த வியப்புறும் நிகழ்வுதனை விண்ணவர்களும், பூமியில் உள்ளவர்களும் அறிந்த நிகழ்ச்சி என்றுரைத்தது.*

**59.** *நான் கூறிய அனைத்தையும் நீங்கள் அறிந்திருந்தும், என்னை இங்கு தங்குமாறு செய்திட எண்ணி தீயச்சொல் சொல்வது தீதுபயக்கும் என எடுத்துக் கூறியது. மான்கள் கூட்டம் அனைத் திற்கும் ஆறுதல் மொழி கூறி தேற்றியது. தன்பால் மாறாத அன்புடைய ஆண்மானிடம் சென்று போற்றுதல் செய்தது. தனது குட்டியினை 'மனம் வருந்தாதே என்று உரைத்து பாலூட்டியது. தன் துணையாகிய ஆண்மானிடம் கன்றினைச் சேர்த்தது. பின்பு நபிகளார் நிற்கும் திசை நோக்கிப் புறப்பட தயாரானது.*

**60.** ***கன்றின் ஆசை:*** *தன்னுடைய இனமாகிய மான்கள் கூட்டத்தினை விட்டு விலகி மிகுந்த களிப்பினால் மனமானது மகிழ்ச்சியடைய காட்டினுள் பெண்மான் சென்றிடும் போது குட்டி முன் ஓடி வந்து வழிவிடாமல் மறித்தது. அதனைக் கண்ட பெண்மான் அதட்டலுடன் கோபமுற்று தடுத்திடவே, சிறிது தூரம் விலகிச் சென்று தன் தாய் முகத்தினை மகிழ்வோடு பார்த்தது இளங்கன்று. தன் இனித்திடும் வாயினால் புல்லினைத் தீண்டி அறியாத இளங்கன்று தாயினைப் பார்த்து பேசத் தொடங்கியது.*

**61.** *உன்னைப் போன்று நபிகள் நாயகத்தின் பொற்பாதங்களைக் கண்டு தரிசித்து அன்புடனும், மன உறுதியுடனும் இஸ்லாம் என்னும் சன்மார்க்கத்தில் இணைதல் அன்றி, உன்னை மட்டும் தனியாகப் போக விட்டுவிட்டு நான் மட்டும் தனித்து இங்கு வாழமாட்டேன் எனக் கூறியது. நான் கூறும் இந்த வார்த்தை உறுதியானது என்பதை எடுத்துரைத்தது தாய்மானுக்கு முன்பாகத் தாவிக் குதித்து ஓடியது.*

**62.** ***தாயும் கன்றும் செல்லுதல்:*** *எல்லாம் வல்ல இறைவனின் தூதுவராகிய நபிகள் நாயகம் அவர்களைப் பார்த்ததினால் ஏற்பட்ட அற்புத செயலே 'இது' என்று மனத்தினுள் எண்ணி, கன்றின் மனம் மறுகிடாது, உயிர்துறப்பதற்கு முன்பாகத் தன்னைச் சேர்வது எல்லையற்ற நலமே வந்தடையும் என்று மனத்தினுள் நினைத்தது. அடர்ந்த காட்டு வழியினைக் கடந்து வேடன் நின்றிருந்த திசையினை நோக்கிப் பெண்மான் கடந்து சென்று சேர்ந்தது.*

63. **நபிகளார் வேடனிடம் பேசுதல்:** கன்றும், தாய்மானும் ஒன்றாக வருவதைப் பார்த்த அழகு மிக்க மலர் மாலையினைத் தாங்கிய தோள்களையுடையவராக வள்ளல் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மனம் மகிழ்வுற்றார்கள். அன்புடன் இருள் சூழ்ந்த மனமுடைய வேடனை இனிதுற அழைத்து "ஒரு மானுக்கு இருமான் உன்னிடத்தே வருவதைப்பார் என்று கூறினார்கள்.

64. **மான்கள் சலாம் உரைத்தல்:** நபிகள் நாயகத்தின் உரையினைக் கேட்ட வேடன் இரு மான்கள் இணைந்து வருவதைக் கண்டு மனம் மகிழ்ந்து நின்ற போது, நெருங்கி வந்த கன்றும், அதன் தாய்மானும், நபிகள் நாயகத்தின் பொற்பாதம் பணிந்து சலாம் உரைத்தது. பாவியாகிய என் பொருட்டு தாங்கள் விரும்பி ஏற்ற பிணையினை விலக்கிக் கொள்ளுங்கள் எனத் தாய்மான் கூறியது.

65. **வேடனின் மன மாற்றம்:** மான் இவ்வாறு கூறிய உரையினைக் கேட்ட நபிகள் நாயகம் அவர்கள் கொலைவில்லை கையில் ஏந்திய வேடனை நோக்கி "எனது பொறுப்பிலிருந்து என்னை விடுவிப்புச் செய்து, உன்னுடைய கொடிய பசியினை இம்மானினைக் கொன்று தின்று அகற்றி, உனது வீட்டிற்குச் சென்று சேர்ந்திடுக" என்று கூறினார்கள். அவ்வுரையினைக் கேட்ட வேடன் இவ்வுலகினில் பொன்னுலகப் பேற்றினை அடைந்தவனாக மேன்மையுற்று வாழ்வதற்குரிய பெரும் பேற்றினைப் பெற்றேன் எனக் கூறி நபிகள் நாயகத்தின் மலர்ப் பாதத்தினைப் பணிந்திட்டான்.

66. **வேடன் மனம் திருந்துதல்:** நபிகள் நாயகத்தின் உரையின்படி திரும்பி வந்துள்ள மானின் அற்புத நிகழ்வினைக் கண்ட வேடன் இத்தகைய அற்புதம் செய்யவல்லவர்கள் இறைவனின் திருத்தூதர் தான் என்பதைத் தெரிந்து கொண்டு, அவரின் பொற்பாதங்களைப் பணிந்து வாழ்த்தினான். மறைகளுக்கு எல்லாம் தலைமை பூண்டு ஒழுகுபவர்களே என்மீது விருப்பம் கொண்டு இஸ்லாமிய மூல மந்திரத்தை ஓதிக் கற்பித்துத் தாருங்கள் என்று தன் இரண்டு கைகளையும் ஏந்தி மனஉறுதியுடனும், மகிழ்ச்சியுடனும் வேண்டி நின்றான்.

67. கரியமேகம் குடைப் பிடித்திட பெரும் சிறப்புடைய நபிகளுக்கு அரசரே! நான் உருவத்தில் வேடனாகத் தோன்றினாலும், வேட்டையாடும் செய்கையினால் மிருகங்களை ஒத்தவனாவேன். ஒன்றை உள்ளுணர்ந்து உண்மையை அறிகின்ற திறமும், பகுத்தறிவும் அற்றவன். மேலும் பாவத்தொழிலைச் செய்யும்

*என்னை உய்வுற்றிடுமாறு ஏகத்துவ சன்மார்க்க நெறிக்கு ஏற்றருள் புரிய வேண்டும். என்னுடைய தெள்ளறிவு துலங்கும் வண்ணம் ஆதரித்து அருள் பாலிக்க வேண்டும். உங்களின் மேன்மையால் மேலும் என்னை மேன்மையாக்கும் படி வேண்டி நின்றான்.*

68. **நபிகளாரின் மகிழ்ச்சி:** *காட்டுவேடன் ஏகத்துவ நெறியினை ஏற்றிட விரும்புவதை அறிந்த நபிகள் நாயகத்தின் முகம் முழு நிலவு போல மகிழ்ச்சியில் திளைத்தது. நபிகளார் இஸ்லாமிய மூல மந்திரத்தை உரைத்திட, வேடன் அதனை மனத்தில் ஏற்று இனிதாக உரைத்து ஈமான் கொண்டு, இஸ்லாமிய மார்க்கத்தை உறுதியுடன் ஏற்று புதுமையினான் ஆயினான். மேலும் இறைவனைத் தொழுதேற்றும் வழிபாட்டு முறையினை மனம் பொருந்திடக் கேட்டு இருநிதியில் பெரு நிதியான சுவர்க்கப் பேறு என்னும் செல்வத்திற்கு உடையவன் ஆகி, தீன் என்னும் இஸ்லாமியச் சன்மார்க்கப் பேணலில் நிலைத்து நின்றான்.*

69. **வேடன் மானுக்கு உரைத்தல்:** *காட்டு வேடன் மானினைப் பார்த்து, உன்னால் பெறுவதற்கரிய நற்பேற்றினைப் பெற்றேன். பெரும் பாவங்களை நீக்கினேன். இதுநாள் வரை உயிரினங் களைக் கொல்லுகின்ற பாவத்தொழிலினை இன்றோடு விட்டு விட்டேன். நீயும் உன்னுடைய மனக்கலக்கத்தினை விட்டு நீங்கி, தெளிவான சிந்தையுடன் உன்னுடைய கன்றுடன் சென்று உன்னுடைய ஆண்மானுடன் இணைந்து வாழ்வாயாக என மானுக்கு உரைத்திட்டான் வேடன்.*

70. **மான் தன் கூட்டத்துடன் இணைதல்:** *வானவர்கள் போற்றும் அரசர்களின் கோமான் முகம்மது நபி அவர்கள், மானினை நோக்கி, நீ உன்னுடைய இருப்பிடமான காட்டிற்குள் செல் என்றார்கள். அப்பொழுது அந்த மான், பெருமானாரின் தாமரை மலரினை ஒத்த பொற்பாதங்களைப் பணிந்து வணங்கியது. இஸ்லாமிய மார்க்கத்தில் இணைந்துள்ள வேடனையும் நன்றியுடன் பார்த்து நானிலமும் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்) இந்த நிகழ்வினை என்றும் நினைத்துப் பேசிடும் வண்ணம், நிலத்தினில் நடந்து தனது இனமான மான்களின் கூட்டத்தில் சேர்ந்தது.*

71. **வேடன் இல்லம் திரும்புதல்:** *அழகிய குங்கும மரங்களின் மலர்கள் தேனினைப் பொழியும் படியான மலர் மாலைகளைத் தாங்கும் செழிப்புடைய திண்ணிய தோள்களை உடைய நபிகள் நாயகம் அவர்கள் தம் வாசனை பட்ட இடம் எல்லாம் துதித்தான்.*

*தாமரை மலரின் ஒத்த பாதத்தினைப் புகழ்ந்து படைகளுக்கும், நாட்டிற்கும் நானே தலைவன் என்றுரைப்பவரைப் போன்று வேடன் மானினைப் பற்றி வரச்செய்து இஸ்லாமிய சன்மார்க்கத்தில் சேர்ந்து ஈமான் என்னும் நம்பிக்கையைப் பற்றிப் படித்தவனாகத் தன்னுடைய இல்லம் சென்று சேர்ந்தான்.*

***72. நபிகளார் தன் இருப்பிடம் சேர்தல்:*** *சோலைகள் நல்ல மலர் களைத் தூவிடும்படியான தூய நிழல் பரப்புகின்ற இடத்தினைக் கடந்து, வானத்தின் மீது படர்கின்ற மேகக் கூட்டங்கள் குடையெனத் தன்னைச் சூழ்ந்து வர, உலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் வாழ்த்து மழை பொழிந்திட, இமய மலையினை ஒத்த திண்ணிய தோளினையுடைய வீரர்கள் அன்புடன் சூழ்ந்து வர வாசனை கமழும் தன் வீட்டிற்கு வந்தார்கள். ஹபீபு என்னும் காரணப்பெயருடைய நபிகள் நாயகம் அவர்கள் தன் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.*

# 6. இயேசு காவியம்

## ஊதாரிப் பிள்ளை

### தன்பிள்ளை வாழட்டும்

*கிராமத்தில் வாழ்ந்த ஒருவனுக்கு இரண்டு மகன்கன் இருந்தனர். அந்த ஒருவனுக்கு அவன் வாழும் ஊர் முழுவதும் சொத்து இருந்தது. அந்த இரண்டு ஒரு மகன் நல்ல குணநலன் மிக்க மணியான சொத்து. மற்றொரு மகனோ நற்குணமில்லாத ஊதாரிக் குணமுடைய நெத்து. கண்டவர்களின் சொற்பேச்சைக் கேட்டு நடக்கும் கறையேறும் வித்தாக இருந்தான். இளைய மகன் சொத்தில் சரிபாதி பங்கை தந்தையிடமிருந்து பிரித்துக் கேட்டான். தந்தையும் மகனுக்குச் சரிபாதி பங்கைப் பிரித்துக் கொடுத்தான். மகன் செயலை நினைத்து மனதிற்கள் துடித்தான். துயரம் அடைந்தாலும் தன் பிள்ளை வாழட்டும் என்று தன் மனதாரப் பிரித்துக் கொடுத்தான்.*

### சொத்தை விற்றல்

*இளைமகன் தந்தையிடமிருந்துப் பிரித்து வாங்கிய சொத்தினைக் குறைந்த விலைக்கு விற்று வெளிநாட்டிற்குச் சென்று கும்மாளமிட்டான். பொதுமகளிர், மது மாது என்று அனைத்துப் பொருளையும் இழந்து, புகழையும் இழந்து தெருவில் நின்றான். அவன் இருந்த வெளிநாட்டில் பெரும் பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. அதனை அறிந்திடாமல் வாழ்வதற் காகப் பல்வேறு இடங்களை நாடிச் சென்றான். அந்நாட்டிலுள்ள ஒரு மனிதனிடம் வேலை கேட்டான். அவனும் பன்றி மேய்க்கும் வேலையினை அவனுக்கு அளித்தான்.*

*பன்றிக்கு அளிக்கும் உணவு தான் அவனுக்கும் கொடுத்தான். இருந்தாலும் ஒவ்வொரு நாளும் அவன் மனதில் தன் தந்தையைப் பற்றிய கனவு இருந்து கொண்டிருந்தது அந்நேரம் தீடீரென ஒரு சிந்தனை அவனின் அறிவுக்குள் எட்டியது. தன் தவற்றை உணர்ந்து தன் தந்தையின் காலடியில் விழுகின்ற நினைவு வந்தது.*

### தந்தையிடம் பாதுகாப்பு கேட்டல்

*தந்தையிடம் வந்து என் தந்தையே! இறைவனுக்கும், உங்களுக்கும் எதிராக இவ்வளவுகளும் இருந்தேன். எத்தனையோ பணியாட்கள் எனக்குப் பணி செய்ய இங்கிருங்க நான் தனித்துச் சென்றேன். என்*

*தவற்றை உணர்ந்து திரும்பி வந்துள்ளேன். நம் வீட்டு பணியாட்களில் ஒரு ஆளாக என்னை ஏற்றிக் கொள்வான்! உன் மகன் என்று சொல்ல எனக்குத் தகுதியில்லை. இருப்பினும் என்னைப் பாதுகாப்பாய் என்று கூறினான். இப்படிப் போய் தன் தந்தையின் காலடியில் விழவேண்டும் என்றெண்னிச் சென்றான். எதிர்பார்த்துக் காத்திருந்த தந்தியின் முன் சென்று நின்றான். தந்தை, என்மகனே' என்று கூறி ஆரத்தழுவினான். பாசமிகந்த தந்தையின் முன் அவன் சிந்தையும் சேர்ந்து அழுதது.*

## மகனைத் தேற்றுதல்

*என்னுடைய அன்பு மகனே! நீ எப்போது திரும்பி வருவாய் என்று எண்ணியிருந்தேன். இளைத்துப் போய் விட்டாயே! என் கண்மணியே! தேனே! நீ தவறான குழந்தையல்ல! எதுவும் சொல்லாதே! சில சந்தர்ப்பச் சூழல்களும், சில சதி வேலைகளும் இப்படி நடக்க காரணமாகி விட்டது! நீ! இப்போதே திரும்ப வருக! என்று அழைத்தார் தந்தை.*

## பணியாட்களுக்குக் கட்டளைகள்

*தந்தையார் தன் பணியாட்களை அழைத்து பட்டாடை நகைகள் அத்தனையும் அணியச் செய்யுங்கள் என்று உத்தரவு இட்டார். என் பெயரினைச் சொல்லும் மகனுக்கு நல்ல இறைச்சி கலந்த உணவினை பிழையின்றி விரைவாகச் செய்திருங்கள் என உத்தரவு இட்டான்.*

## மூத்தமகன் வருகை

*அன்று மாலை மூத்த மகன் தன் வீட்டிற்குத் திரும்பி வந்தான். வீட்டிலுள்ள பலவகையான நாட்டியங்களும், சங்கீதங்களும் ஒலித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். காலையில் நின்றபடியே வீட்டினுள்ளே என்ன சப்தம்? என்று கேட்டான். பணியாட்களில் ஒருவன் இல்லத் திற்குத் தம்பி வந்துள்ளான் என்பதைக் கூறினான். இதைக் கேட்ட கோபத்தில் வீட்டிற்குள் செல்லாமல் வெளியவே நின்றான் மூத்த மகன். அப்போது தந்தை அவ்விடம் நோக்கி வந்தார். தந்தையிடம் மூத்தமகன்" சாத்திரத்தை மறந்தவனை மிகுந்த வரவேற்பளித்து ஏற்றுள்ளீர்கள்? சாப்பாடு, பல வகையான நடனமென்று ஏற்றிப் போற்றுகின்றீர் என்றான்.*

## தந்தையின் மறுமொழி

*உங்களோடு இதுநாள் வரை இருந்து நான் என்ன இன்பத்தை அடைந்தேன்? ஒரு நாளாவது எனக் கென்று தனியாக விருந்தவகை உணவு உண்டா? என்று கண்கலங்கியவனாய் மூத்தமகன் தந்தையிடம் கூறினான். அதைக் கேட்ட தந்தை கனிவான முறையில் பதிலளித்தான்.*

*என்றும் என்னோடு இருப்பவன் நீ! மட்டுமே அன்றோ? என் செல்வம் முழுவதும் எந்நாளும் உன்னுடையது அன்றோ? ஆனால் உன் தம்பி இறந்த பின் மீண்டும் உயிர்பெற்று வந்திருக்கிறான். உண்மையிலே மறுபிறவி எடுத்து வந்திருப்பதால் அவனுக்கு விருந்துபதேசம் செய்தேன் என்று கூறினான்.*

## அலகு - 5

# 1. திருநாவுக்கரசர்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் பக்தி இயக்கத்தை வளர்த்த சிவனடியார்களுள் தலை சிறந்தவர். தேவாரம் பாடிய மூவருள் இரண்டானவர் திருநாவுக்கரசர். இறைவனிடம் பக்தி செலுத்துவதில் தொண்டை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டவர் என்று புகழப்படுகிறார்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருநாவுக்கரசர் |
| இயற்பெயர் | : | மருள் நீக்கியர் |
| காலம் | : | கி.பி. ஏழாம் நூற்றாண்டு |
| நெறி | : | தாசமார்க்கம் |
| பாடிய பாடல்கள் | : | 4900 என்பர் |
| இன்று கிடைப்பவை | : | 313 பதிகங்கள் |
| சிறப்புப் பெயர் | : | வாசீகீரர், தாண்டக வேந்தர், அப்பர் |

இளமையான வயதில் தருமசேனர் என்ற பெயருடன் சமண சமயத்தைச் சார்ந்து வாழ்ந்தார். தமக்கையின் அருள் திறத்தாலும் சூலை நோயின் தாக்கத்தால் மீண்டும் சைவ சமயத்திற்குத் திரும்பினார். இவர் பாடிய பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

## பக்தி இலக்கியம்
## திருநாவுக்கரசர் தேவாரம்

1. நாமார்க்குங் குடியல்லோம் நமனை அத்சேரம்
நரகத்திலிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத தன்மை யான
சங்கரன் நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளரய்க்
கொய்ம் மலர்ச்சே வடி இணையே குறுகினோமே.”

## பாடல் பொருள்

நாம் வேறு யார்க்கும் அடிமை அல்லோம். இயமனை அஞ்சோம். நரகத்தில் வீழ்ந்து விட மாட்டோம். பொய்கள் கொல்லமாட்டோம்.

*என்றும் மகிழ்ச்சியுடன் இருப்போம். பிணிகள் இன்றி வாழ்வோம். வேறு யாரையும் பணிவோம். அல்லோம். எல்லா நாளும் எமக்குள்ளது இன்பமே அன்றித் துன்பமில்லை. தான் யார்க்கும் அடிமையாகாத தன்மையானும், நல்ல வெண் சங்கு குழையை ஒரு காதில் அணிந்துள்ள கோமான் ஆகிய சங்கரனுக்க நாம் என்றும் மீளமுடியாத அடிமையாய் இருப்போம். அப்பொழுது மலர்ந்த மலர் போன்ற அவன் திருவடி களை அடைக்கலமாக அடைந்தோம் ஆகலின் பொலிவு அடைவோம்.*

# 2. மாணிக்கவாசகர்

*பாண்டிய நாட்டிலுள்ள திருவாதவூரில் பிறந்தவர். அந்தணர் குலத்தைச் சார்ந்தவர். பாண்டிய மன்னன் அரிமர்த்தப் பாண்டியனிடம் அமைச்சராகப் பணியாற்றினார். சைவ சமயக் குரவர் நால்வரில் நான் காமானவராகக் கருதப்படுகிறார்.*

| | | |
|---|---|---|
| *பெயர்* | : | *தெரியவில்லை* |
| *சிறப்புப் பெயர்* | : | *மாணிக்கவாசகர்* |
| *காலம்* | : | *கி.பி. 9-ஆம் நூற்றாண்டு* |
| *நூல்கள்* | : | *1) திருவாசகம், 656 செய்யுள்*<br>*2) திருக்கோவையர் = 400 அகப்பொருள் துறை* |
| *சிறப்புப்பெயர்* | : | *திருவாதவூரார், தென்னவன் பிரம்மராயன்* |
| *மார்க்கம்* | : | *சன்மார்க்கம்.* |

*திருப்பெருந்துறையில் ஞான உபதேசம் அருளியதன் வாயிலாக இறைவன் ஆட்கொள்வதால் திருவாசகம் பாடினார். பாவை பாடிய வாயால் கோவை பாடுக என இறைவன் கேட்டுப் கொண்டதால் திருக்கோவை யாரையும் பாடினார் என்பர்.*

## மாணிக்கவாசகரின்
## திருவாசகம்

1. நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள்வாழ்க
ஆகம மாசிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

2. வேகங்கெடுத்தாண்ட வேந்த னடிவாழ்க
பிறப்பறுக்கும் பிந்நகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்குழல்கள் வெல்க
சுரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குச் சீரோன் சுழல் வெல்க

## பாடல் பொருள்

*1. இறைவனின் பெருமையை உணர்த்தும் நாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்து எழுத்தானது என்றும் நிலை பெறுக.*

*இறைவனது திருவருட்சக்தியானது என்றும் நிற்கும் நாதன் தாள் வாழ்க! கண்களை மூடித்திறக்கும் நேரமளவுங்கூட அடியேனுடைய உள்ளத்தைவிட்டு நீங்காதவனுடைய திருவடிகள் நிலைத்து வாழ்வனவாகுக! திருவாவடுதுறை அடியார்க்கு மெய்யுணர்த்தி ஆட்கொண்டருளிய தலைமையருட் பேராசிரியராகிய முதல்வனின் திருவடிகள் என்றும் சிறந்த விளங்குக! வீட்டு நூல் கூறும் தனிப்பொருளாய் நின்று இனிமை தருபவனுடைய திருவடிகள் உள்ளத்தில் என்றும் நிலைபெறுக. தன்னிலையில் ஒருவனாய், அடியவர்கள் நினைக்கும் பல வடிவமுடையவனாகிய உலகு யிரெங்கும் தங்குபவனுடைய திருவடிகள் என்றும் பொலிவு பெறுக!*

2. *விரைவைத் தொலைத்து, திருவருள் தந்து ஆட்கொண்ட மன்னனது திருவடிகள் மேம்படுக! பிறவியை வேரறுக்க வல்ல தலைக்கோலப் பெருமானுடைய வீரச் சிலம்பு நிறைந்த திருவடிகள் சிறந்து விளங்குக! அன்பிற்குத் தூரமாகயுள்ளவர்கள். அணுக முடியாத தூரத்தில் உள்ளவனுடைய அழகிய மெல்லடிகள் வெற்றியுடன் திகழ்க. கை கூப்பித் தொழுபவர்களின் நெஞ்சில் நினைத்து நினைத்து மகிழ்ச்சியடைவதற்கு ஏதுவாகிய அரசனுடைய திருவடிகள் நிலைபெற்றுச் சிறக்க. தலை குனிந்து வணங்குபவரை மேன்மை பெறச் செய்யும் புகழ் உடையவனின் திருவடிகள் வெற்றியுடன் ஏளிர்க!*

## பன்னிரு ஆழ்வார்கள்

*வைணவ நெறியைத் தமிழகம் எங்கும் பரப்பியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். அவர்களுள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும் முதலாழ்வார்கள் என்றழைப்பர். இவர்கள் காலத்தால் முற்பட்டவர்கள் ஆகும்.*

# 3. பொய்கையாழ்வார்

1. காஞ்சிபுரத்தில் பிறந்தவர்.
2. திருவஃகா என்ற இடத்திலுள்ள பொய்கையிலுள்ள தாமரை மலரில் பிறந்ததால் பொய்கையாழ்வார் என்றழைக்கப்பட்டார்.
3. இவர் திருமாலின் சங்காகிய பாஞ்ச சன்னியத்தின் அவதாரம்.
4. இவர் பாடிய பக்திப் பாசுரங்கள் 100.
5. இதனை முதல் திருவந்தாதி என்றழைத்தனர்.
6. திருமாலின் புகழை.

**"வையந் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்யக கதிரோன் விளக்காகச் - செய்ய**
**சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை**
**இடராழி நீங்குகவே."**

என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

பொய்கையாழ்வார் இந்த உலகத்தை ஓர் அகல்விளக்காகவும், அதைச் சூழ்ந்து இருக்கும் கடல் நீரை அகல் விளக்கில் விடும் நெய்யாகவும், சூரியனின் செங்கதிரே விளக்கில் எரியும் திரியாகவும் கொண்டு ஒளிபொருந்திய ஆழியான் திருவடிகளுக்கு என்னுடைய துன்பங்கள் அனைத்தும் நீங்க நான் இறைவனக்குப் பாமாலைச் சூட்டினேன்.

## 4. பூதத்தாழ்வார்

1. மாமல்லபுரத்தில் பிறந்தவர். இவ்வூருக்கு திருக்கடல் மல்லை என்றும் பெயர் உண்டு.
2. பூதம் என்ற சொல் பலப் பாடல்களில் வருமாறு பாடிய காரணத்தால் பூதத்தாழ்வார் எனப்பட்டார்.
3. இவர் கதாயுதத்தின் அவதாரம்.
4. குருக்கத்தி (மாதவி) மலரில் தோன்றியவர்.
5. இவர் பாடிய பக்திப் பாசுரங்கள் 100.
6. இவர் பாடியதை இரண்டாம் திருவந்தாதி என்றழைத்தனர்.
7. இவர் திருமாலைப் புகழ்ந்து பாடிய பாடல்

**“அன்பே தகளியா யார்வமே நெய்யாக**
**இன்புருகுஞ் சிந்தை யிடுதிரியாய் - நன்புருகி**
**ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ்புரிந்த நான்”**

என்று புகழாரம் சூட்டுகிறார்.

பூதத்தாழ்வார் அறிவை வளர்க்கும் ஞானத்தமிழ் நூலை இயற்றிய நான், இறைவனைப் பற்றி மனதில் தோன்றிய அன்பை தகளியாகவும், மனத்தில் தோன்றும் பேரார்வத்தை நெய்யாகவும், இனிய மனத்தினைத் திரியாகவும், மெய்யுணர்வு மயமான உள்ளுயிர் கிளர்க் தெரியும் விளக்கை நாராயணனுக்கு ஏற்றி வைத்து மகிழ்கின்றார்.

# 5. பேயாழ்வார்

1. *சென்னை மயிலாப்பூரில் பிறந்தவர்.*
2. *பக்தி பரவசத்தால் நெஞ்சம் சோர்ந்து, கண் சுழன்று, அழுது, சிரித்து ஆடிப்பாடிப் பேய் பிடித்தாற் போல் திருமாலைத் தொழுது பாடியமையால் இவர் பேயாழ்வார் என்றழைக்கப்பட்டார்.*
3. *இவர் திருமாலின் கந்தகம் என்னும் வாளின் அம்சம்.*
4. *செவ்வல்லிப் பூவில் தோன்றியவர்.*
5. *இவர் பாடிய பக்திப் பாசுரங்கள் 100.*
6. *இவர் பாடியது மூன்றாம் திருவந்தாதி.*
7. *திருமாலின் திருக்கோலத்தை.*

**"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன்"**

*என்று பாடுகிறார். இந்த மூவரையும் முதலாழ்வார்கள் என்பர். இவர்கள் மூவரும் ஐப்பசி மாதத்தில் அடுத்தடுத்த நாளில் தோன்றினர் என்பர்.*

1. **திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்**
   **அருக்கன் அணிநிறமும் கண்டேன் செருக்கிளரும்**
   **பொன்ஆழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்**
   **என்ஆழி வண்ணன்பால் இன்று**

*கருநிற கடல் வண்ணனிடத்தில் அழகிய திருமகளைக் கண்டேன். அழகிய பொன்னிற திருமேனியினைக் கண்டேன். செங்கதிர் ஒளியினையும் கண்டேன். களத்தில் சீறிச் செயல்படும் பொன்னால் செய்த திருவாழியையும் கண்டேன். கருநிற வண்ணனின் திருக்கையில் வலம்புரிச் சங்கையும் கண்டு வந்தேன்.*

# 6. ஆண்டாள்

1. பெரியாழ்வார் வளர்ந்த வளர்ப்பு மகள் ஆவார்.
2. இவர் அணிந்த மலர் மாலையை இறைவன் மனமுவந்து ஏற்றதால் "சூடிக்கொடுத்த நாச்சியார்" என்றும் அழைக்கப்படுகிறார்.
3. நந்தவனத்தில் துளசிச் செடிக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டு பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்ட தெய்வக் குழந்தை ஆண்டாள்.
4. பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாள் மட்டுமே பெண் ஆழ்வார்.
5. இறைவனைக் காதலனாகவும், தம்மைக் காதலியாகவும் நினைத்து நாச்சியார் திருமொழி (143 பாடல்கள்), திருப்பாவை (38 பாடல்கள்) என இரு நூல்களைப் பாடியுள்ளார்.
6. "மானிடர்க்கு என்று பேச்சுப்படில் வாழ்கில்லேன் கண்டாய் மன்மதனே" என்று திருமாலையே நினைத்து வாழ்ந்தவர்.
7. காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு என்பர்.

**1. மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்**
**நீராடப் போதுவீர், போதுமினோ நேரிழையீர்,**
**சீர்மல்கும் ஆய்ப்பாடி செல்வச் சிறுமீர்கள்!**
**கூர்வேற்கொடுந் தொழிலன், நந்தகோபன் குமரன்**
**ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்**
**கார்மேனிச் செங்கண் கதிர்மயம் போல் முகந்தான்**
**நாராயணனே நமக்கே பறை தருவான்**
**பாரோர் புகழப் படிந்து ஏலோர் எம்பாவாய்.**

முழுநிலவு ஒளிவீசும் நல்ல நாளான இன்று மார்கழி மாதம் பிறந்து விட்டது. சிறந்த அழகிய ஆபரணங்களை அணிந்தவர்களே! செல்வவளம் நிறைந்த ஆயர்பாடியின் செல்வச் சிறுமியர்களே! எழுந்திருங்கள்! நாம் அனைவரும் இன்று அதிகாலையில் நீராடச் செல்வோம். கூர்மையான வேலாயுதத்தைக் கையில்கொண்டு போர்த் தொழிலில் வல்லவனான நந்தகோபனாரின் திருமகன்.

அழகிய கண்களை உடைய யசோதையின் சிங்கக் குட்டி போன்ற திருமகன் கருமேகங்களைப் போன்ற கரிய மேனியினையும், சிவந்த கண்களையும் கொண்டவன். சூரியனைப் போன்றும் சந்திரனைப்

*போன்றும் ஒளி நிறைந்த முகத்தினை உடையவன். மேற்சொன்ன தன்மைகளைக் கொண்ட நாராயணனே நமக்குப் பரம்பொருளாவான். அவன் நிச்சயம் நமக்கு நோன்பின் பலனை அருளுவான். அவனின் திருவருளால் உலகத்தார் நம்மைப் புகழ்வார்கள். ஆகையால் வாருங்கள்! நீரோடப் போவோம் பாவாய்! என்று அழைக்கிறார்.*

## பகுத்தறிவு இலக்கியம்

# 1. திருமூலர்

## திருமூலரின் திருமந்திரம்

### அன்புடைமை

1. அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

2. பொன்னைக் கடத்திலங்கும் புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே

3. என்அன்(பு) உருக்கி இறைவனை ஏத்துமின்
முன் அன்(பு) உருக்கி முதல்வனை நாடுமின்
புன் அன்(பு) உருக்கிப் பொருந்தகை நந்தியுந்
தான் அன்(பு) எனக்கே தலைநின்றவாறே

4. தானொரு காலம் சுயம்புவென் றேத்தினும்
வானொரு காலம் வழித்துணை யாய்நிற்கும்
தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்
தானொரு வண்ணம் என் அன்பில்நின் றானே.

5. கண்டேன் கமழ்தரு கொன்றையி னான்அடி
கண்டேன் கரியுரி யான்தன் கழல் இணை
கண்டேன் கமல மலர்உறை வான்அடி
கண்டேன் கழலதென் அன்பினுள் யானே.

### பாடல் பொருள்

1. *அன்புவேறு, சிவன் வேறு இரண்டும் ஒன்றல்ல - தனித் தனியான இரண்டு என்று சொல்பவர்கள் அறிவில்லாத மூடர்களே ஆவார். அன்பே சிவம் என்பதைப் பலரும் அறியாதிருக்கிறார்கள். அன்பு தான் சிவம் என்பதை எல்லோரும் அறிந்துவிட்டால், பிறகு அவர்களே அன்புருவான சிவமாய் அமர்ந்திருப்பார்கள். வாழ்ந் திருப்பார்கள்.*

2. *பொன்னைவிடச் சிறப்பாக ஒளியினை விடும் புலித்தோலை அணிந்தவன். மின்னலைப்போல ஒளிவீசித் திகழும் இளம்பிறைச் சந்திரன் பொருந்திய கடைமுடியோடு கூடியவன். திரு வெண்ணீறு பூசி அம்பலத்தினில் ஆனந்தக் கூத்தாடும் பரம்பொருள் என்ற இறைவன். அந்த இறைவனிடம் நான் கொண்ட அன்பு இரண்டறக் கலந்தது. இரண்டறப் பின்னிப் பிணைந்தது. பிரிக்க இயலாத பேரன்பு ஆகும்.*

3. *என்ன பேசி ன்ன பயன்? அன்பால் அகம் குழைத்து மனம் உருக இறைவனை வணங்குங்கள். முதன்மையாக முதலில் அகம் குழைய அவன் அருளைப் பெற முயலுங்கள். அதன் படி நான் அன்பு செலுத்திய பேரறிவாளனாகிள பெருந்தகை அன்பை எனக்குத் தந்து உதவ நான் அவன் அடியவன் ஆனேன்.*

4. *சிவபெருமான் உருவம், அருவம், அரு உருவம் ஆகிய மூன்றும் கடந்த முழுமுதற்பொருள் ஆகும். இப்படிப் பட்ட சிவபெருமானை ஒரு காலத்தில் அவன் தானானக சுயம்புவாகத் தோன்றியவன் என்று போற்றி வணங்கினாலும், வானில் இருந்து வழிபடுபவர் களுக்கு ஒரு சமயம் துணை புரிது அருள் செய்வான். தேனின் சுவை போன்ற உமையம்மை ஒரு பாகத்தில் இருக்கக் கொன்றை மலர்மாலைச் சூடிய சிவபெருமான் எனக்கு அவனொடு வடிவத்தில் அன்புருவாகி என் அன்பில் கலந்து நின்றான்.*

5. *நறுமணம் வீசும் கொன்றை மலர் மாலை சூடிய பரமன் திருவடி களைக் கண் குளிரக் கண்டேன் கண்களால் கண்டு களிப்புற்றேன். யானைத் தோல் உடை அணிந்த அரன் அழகிய திருவடிகள் இரண்டை என் உள்ளமாகிய தாமரை மலரில் வாழ்கின்ற உண்மைப் பொருளை என் மனக்கண்ணால் கண்டு கொண்டேன். அத்தனை அருட்காட்சிகளையும் நான் என் உள்ளத்தில், மனதில் அவனிடம் செலுத்திய அன்பாலே அடையப் பெற்றேன். அவன் திருவடித் துணையினைப் பெற்றேன்.*

# 2. பட்டினத்தார் பாடல்கள்

## திருவிடை மருதூர்

*பட்டினத்தார் என்னும் பெயருடன் தமிழ்நாட்டில் மூன்று புலவர்கள் இருந்துள்ளனர். இப்பாடலில் இடம் பெற்றுள்ள பட்டினத்தார் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். பட்டினத்தார் என்னும்பட்டினத் தடிகள் சோழர் காலத்தில் வாழ்ந்த துறவி ஆவார். இவர் காவிரி பூம்பட்டினத்தில் வணிகத் தொழில் செய்த பெருஞ் செல்வர் ஆவார். பொருளின் நிலையாமையை உணர்ந்து கடவுள் கால் ஈர்ப்பு ஏற்பட்டு துறவறம் பூண்டவர்.*

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டித்தடிகள்
போல் யாரும் துறக்க அரிது"

*என்ற கூற்றால் பாராட்டப் படுபவர். சிவநேகர் - ஞானசாலை தம்பதியருக்கு மகனாக காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தவர். இவரின் இயற்பெயர் சுவேதாரண்யன். திருவெண் காட்டில் உறையும் தெய்வத்தின் பெயரே சுவேதாரண்யப் பெருமாள் ஆகும். அதனால் இவரை 'திருவெண்கயர்' என்றும் அழைக்கப்படுகிறார். "காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்ற வாசகமே பட்டினத்தடிகளுக்கு ஞானம் அளித்த வாசகமாகும். இவர் பாடிய நூல்கள்*

- *கோயில் நான்மணிமாலை*
- *திருவிடை மருதூர் மும்மணிக்கோவை*
- *திருக்கழுமல மும்மணிக்கோவை*
- *திருவெற்றியூர் ஒருபா ஒருபஃது*
- *திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி*

1. காடே திரிந்ரெதன்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி
   ஓடே யெடுத்தென்ன உள்ளன் பிலாதவ ரோங்குவின்னோர்
   நாடே யிடைமரு தீர்க்கு மெய்யன்பர் நாரியார்பால்
   வீடே யிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே

2. தாயும் பகைகொண்ட பெண்டிர் பெரும்பகை தன்னுடைய
   சேயும் பகையற வோரும் பகையிச் செகமும் பகை
   ஆயும் பொழுதி வருஞ்செல்வ நீங்கிலிங் காதலினாற்
   தோயுநெஞ் சேரும தீர்பொற் பாதஞ் சுதந்திரமே.

## பாடல் பொருள்

1. *உள்ளத்திலே மெய்யன்பில்லாதவர்கள் வனத்திலே சுற்றித் திரிந்தால் என்ன? காற்றையே உணவாகக் கொண்டு வாழ்ந்தால் என்ன? கந்தையான துணியினை அணிந்து பிச்சைப் பாத்திரத்தைக் கரங்களில் தாங்கிப் பிச்சையெடுத்தால் என்ன? அவற்றால் ஒரு பயனும் இல்லை. உயர்ந்த தேவர்களின் உலகமே என்று எண்ணத் தக்கயுள்ள திருவிடை மருதூரில் வீற்றிருந்து அருளும் சிவபெரு மானிடத்தில் உண்மையான அன்புடையவர்கள் பெண்களுடன் வீட்டிலே இருந்தாலும் உண்மை ஞானத்தால் உண்டாகும் முக்தி இன்பத்தை அடைவார்கள்.*

2. *பிரவிர்த்தி மார்க்கத்திலிருந்தும் மனமே! ஆராய்ந்து யோசித்துப் பார்க்கும் காலத்தில் இவ்வுலகத்தில் அரிய பொருட் செல்வம் நீங்குமானால் பெற்ற தாயாரும் பகைவர் ஆவார். மணம் செய்த மனைவியரும் பகைவர் ஆவர். தன் பிள்ளைகளும் பகைவராவார்கள். சுற்றத்தினரும் பகைவர் ஆவர். இவ்வுலகிலுள்ள மற்றவர்களும் பகைவர் ஆவார்கள். அதனால் நமக்குச் சுதந்திரமாய் உள்ளது திருவிடை மருதூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானது திருவடித் துணையே ஆகும்.*

## 3. கடுவெளிச்சித்தர் - ஆனந்தக்களிப்பு

*'கடுவெளி' என்பது எல்லையற்று விரிந்த பரந்த பிரபந்தப் பெருவெளியாகும். தன்னுடைய பாடல்களில் 'கடுவெளி' பற்றி அதிகம் பாடியதால் இவர் கடுவெளிச்சித்தர் என்று அழைக்கப்படுகிறார். இவர் சூனியத்தை தியானித்து சித்தி பெற்றதால் கடுவெளிச் சித்தர் என்று அழைக்கப்பட்டார் என்றும் கூறுவர். இவர் காஞ்சியில் சமாதியடைந்த தாகக் கூறுவர் இவர் இயற்றிய நூல்கள்*

1. *கடுவெளிச் சித்தர் பாடல்கள்*
2. *ஆனந்த வைத்தியம்*
3. *வாத வைத்தியம்*
4. *பஞ்ச சாத்தினம் போன்றவை ஆகும்.*

### கடுவெளிச் சித்தர் பாடல்கள்
### ஆனந்தக் களிப்பு
### பல்லவி

1. பாபஞ்செய் யாதிரு மனமே - நாளைக்
    கோபஞ்செய் தேயமன்
கொண்டோடிப் போவான்
    பாபஞ்செய் யாதிரு மனமே

2. சாபங் கொடுத்திட லாமோ - விதி
    தன்னை நம் மாலே தடுத்திடலாமோ
கோபந் தொடுத்திட லாமோ - இச்சை
    கொள்ளக் கருத்ததைக் கொடுத்திட லாமோ.

3. சொல்லருஞ் சூதுபொய் மோசம் - செய்தாற்
    சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லபத் திசு வாசம் - எந்த
    நாளும் மனிதர்க்கு நன்மையாம் நேசம்.

4. நீர்மேற் குமிழியிக் காயம் - இது
    நில்லாது போய்விடும் நீயறி மாயம்
பார்மீதில் மெத்தவும் நேயம் - சற்றும்
    பற்றா திருந்திடப் பண்ணு முபாயம்

5. நத்த வனத்திலோ ராண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந் தானொரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி

6. தூடண மாகச்சொல் லாதே - தேடுஞ்
சொத்துக்க ளரிலொரு தூசும்நில் லாதே
ஏடணை மூன்றும் பொல்லாதே - சிவத்
திச்சைவைத் தாலெம லோகம்பொல் லாதே

7. நல்ல வழிதனை நாடு - எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு
வல்லவர் கூட்டத்திற் கூடு - அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக்கொண்டாடு.

8. நல்லவர் தம்மைத்தள் ளாதே - அறம்
நாலெட்டில் ஒன்றேனும் நாடித்தள் ளாதே
பொல்லாங்கில் ஒன்றுங்கொள்ளாதே - கெட்ட
பொய்ம்மொழிக் கோள்கள் பொருந்த விள்ளாதே

9. வேத விதிப்படி நில்லு - நல்லோர்
மேவும் வழியினை வேண்டியே செல்லு
சாதக நிலைமையே சொல்லு - பொல்லாச்
சண்டாளக் கோபத்தைச் சாதித்துக் கொல்லு.

10. பிச்சையென் றொன்றுங் கேளாதே - எழில்
பெண்ணாசை கொண்டு பெருக்கமாளாதே
இச்சை துன்னை யாளாதே - சிவன்
இச்சைகொண் டவ்வழி யேறிமீ ளாதே.

11. மெய்ஞ்ஞானப் பாதையிலேறு - சுத்த
வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு
அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு - உன்னை
அண்டினோர்க்கு ஆனந்த மாம்வரி கூறு.

12. மெய்க்குரு சொற்கட வாதே - நன்மை
மென்மேலுஞ் செய்கை மிகஅடக் காதே
பொய்க்கலை யால்நட வாதே - நல்ல
புத்தியைப் பொய்வழி தனில்நடத் தாதே.

13. கூட வருவதொன் றில்லை - புழுக்
கூடெடுத்துத் திங்கள் உலவுவதே தொல்லை
தேடரு மோட்சம் தெல்லை - அதைத்
தேடும் வழியைத் தெளிவோடு மில்லை.

14. ஐந்துபேர் சூழ்ந்திருங்காடு - இந்த
ஐவர்க்கும் ஐவர் அடைந்திடும் நாடு
முந்தி வருந்திநீ தேடு - அந்த
மூலம் அறிந்திட வாழுத்தி வீடு.

15. உள்ளாக நால்வகைக் கோட்டை - பகை
ஓடப் பிடித்திட்டால் ஆளலாம் நாட்டை
கள்ளப் புலனென்னும் காட்டை - வெட்டிக்
கனலிட் டெரித்திட்டாற் காணலாம் வீட்டை.

16. காசிக்கோ டில்வினை டோமோ - அந்தக்
கங்கையா டில்கதி தானுமுண் டாமோ
பேசமுன் கன்மங்கள் சாமோ - பல
பேதம் பிறப்பது போற்றினும் போமோ.

17. பொய்யாகப் பாராட்டுங் கோலம் - எல்லாம்
போகவே வாய்த்திடும் யாவர்க்கும் போங்காலம்
மெய்யாக வேசுத்த சாலம் - பாரில்
மேவப் புரிந்திடில் என்னனு கூலம்.

18. சந்தேக மில்லாத தங்கம் - அதை
சார்ந்துகொண் டாலுமே தாழ்வில்லாப் பொங்கம்
அந்தமில் லாதவோர் துங்கம் - எங்கும்
ஆனந்த மாக நிரம்பிய புங்கம்.

19. பாரி லுயர்ந்தது பத்தி - அதைப்
பற்றின போர்க்குண்டு மேவரு முத்தி
சீரி லுயர் அட்ட சித்தி - யார்க்குஞ்
சித்திக்கு மேசிவன் செயலினால் பக்தி.

20. அன்பெனும் நன்மலர் தூவிப் - பர
மானந்தத் தேவின் அடியினை மேவி
இன்பொடும் உன்னுடல் ஆவி - நாளும்
ஈடேற்றத் தேடாய்நீ இங்கே குலாவி.

21. ஆற்றாரும் வீடேற்றங் கண்டு - அதற்
கான வழியை யறிந்துந் கொண்டு
சீற்றமில் லாலே தொண்டு - ஆதி
சிவனுக்குச் செய்திடிற் சேர்ந்திடுங் கொண்டு.

22. ஆன்மாவா லாடிடும் ஆட்டந் - தேகத்
தான்மா வுற்றபோதே யாமுடல் வாட்டம்
வான்கதி மீதிலே நாட்டம - நாளும்
வையி லுனக்கு வருமேகொண்டாட்டம்.

23. எட்டு மிரண்டையும் ஓர்ந்து - மறை
எல்லா முனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து
வெட்ட வெளியினைச் சார்ந்து - ஆனந்த
வெள்ளத்தின் மூழ்கி மிகுகளி கூர்ந்து.

24. இந்த வுலகமும் உள்ளுஞ் - சற்றும்
இச்சைவை யாமலே எந்நாளுந் தள்ளு
செந்தேன்வெள் ளமதை மொள்ளு - உன்றன்
சிந்தைதித் திக்கத் தெவிட்டவுட் கொள்ளு.

25. பொய்வேதந் தன்னை பாராதே - அந்தப்
போதகர் சொற்புத்தி போதவோ ராதே
மைவிழி யாரைச்சா ராதே - துன்
மார்க்கர்கள் கூட்டத்தில் மகிழ்ந்து சேராதே.

26. வைதோரைக் கூடவை யாதே - இந்த
வைய முழுதும்பொய்த் தாலும்பொய் யாதே
வெய்ய வினைகள்செய் யாதே - கல்லை
வீணில் பறவைகள் மீதிலெய் யாதே.

27. சிவமன்றி வேறே வேண்டாதே - யார்க்குந்
தீங்கான சண்டையைச் சிறக்கத் தூண்டாதே
தவநிலை விட்டுத்தாண் டாதே - நல்ல
சன்மார்க்க மில்லாத நூலைவேண் டாதே.

28. பாம்பினைப் பற்றியாட் டாதே - உன்றன்
பத்தினி மார்களைப் பழித்துக்காட் டாதே
வேம்பினை யுலகிலூட் டாதே - உன்றன்
வீறாப்பு தன்னை விளங்க நாட்டாதே.

29. போற்றுஞ் சடங்கைநண் ணாதே - உன்னைப்
புகழ்ந்து பலரிற் புகவொண் ணாதே
சற்றுமுன் வாழ்வையெண் ணாதே - பிறர்
தாழும் படிக்குநீ தாழ்வைப்பண் ணாதே.

30. கஞ்சாப் புகைபிடி யாதே - வெறி
காட்டி மயங்கியே கட்குடி யாதே
அஞ்ச வுயிர்மடி யாதே - புத்தி
அற்றஅஞ் ஞானத்தின் நூல்படி யாதே.

31. பக்தி யெனுமேனி நாட்டித் - தொந்த
பந்தமாற் றவிடம் பார்த்ததை நீட்டி
சத்திய மென்றதை யீட்டி - நாளுந்
தன்வச மாக்கிக்கொள் சமயங்க ளோட்டி.

32. செப்பரும் பலவித மோகம் - எல்லாம்
நீயென்று ஒறுத்துத் திடங்கொள் விவேகம்
ஒப்பரும் அட்டாங்க யோகம் - நன்றாய்
ஓர்ந்தறி வாய் அவற் றுண்மைசம் போகம்.

33. எவ்வகை யாகநன் னீதி - அவை
எல்லா மறிந்தே யெடுத்துநீ போதி
ஒவ்வாதென் றேபல சாதி - யாவும்
ஒன்றென் றறிந்தே யுணர்ந்துற ஏதி.

34. கள்ளவே டம்புனை யாதே - பல
கங்கையி லேயுன் கடம்நனை யாதே
கொள்ளைகொள் ளநினை யாதே - நட்புக்
கொண்டு பிரிந்துநீ கோள்முனை யாதே.

35. எங்குஞ் சயப்பிர காசன் - அன்பார்
இன்ப இருதயத் திருந்திடும் வாசன்
துங்க அடியவர் தாசன் - தன்னைத்
துதிக்கிற் பதவி அருளுவன் ஈசன்.

*1. • மனத்தால் பாவத்தைக் கருதாமலும் செயலால் கருதிய அதைச் செய்யாமலும் இருப்பாயாக. நாள்தோறும் கோபம் கொள்ளாமல் இருப்பாயாக.*

*இல்லாவிட்டால் இயமன் உன் உடலைக் கொண்டு ஓடி மறைவான். ஆகவே மனமே பாவம் செய்யாதிரு*

*விளக்கம்: மனம் திருந்தினால் செயல் திருத்தமாகும் கோபமாகிய குணமாறுபாட்டால் நல்லதும் தீயதாகவே ஆகிவிடும். எனவே மனத்த நோக்கி யாவும் கூறினாராம்.*

*இவர் பாடலில் அடிதோறும் ஈற்றுச் சொல் எதுகையாக மறு அடியில் வந்தது. ஈற்று எதுகை என்பர். காவடிச் சிந்துகளில் இப்படி வருவது இயற்கை.*

*2. • ஒருவருக்குக் கடுமொழியால் சாபம் கொடுக்கக் கூடாது. ஏன் என்றால் அவரவர் விதிப்படி நடக்கும் வாழ்வை நாம் திருத்திடலோ தடுத்திடலோ நம்மால் இயலுமா?*

*கோபத்தையும் விருப்பம் செய்வதையும் பிறர்மேல் நாம் மேற்கொள்வதும் கூடாது.*

*3. • சொல்லுக்கு அடங்காத தீரும் சூது. பொய், மோசம் ஆகியன செய்தால் உன்னை மட்டுமல்லாது உன் சுற்றத்தையும் முழுமையாக இல்லாமல் செய்திடும்.*

*நலம் தரும் பக்தி, விசுவாசம் ஆகியன எந்த நாளிலும் மனிதர்க்கு நன்மையும் அன்பும் தருமாம்.*

4. • *இவ்வுடம்பு நீரில் தோன்றும் குமிழிபோல் நிலையில்லாது அழியும். இருந்த மாயத்தை நீ அறிந்து கொள். இந்த உலகில் மிகவும் பற்று வைக்காதிருந்தால் அதுவே நல்லவழி (உபாயம்) காட்டி உன்னை உயர்த்தும்.*

5. • *கடவுள் அவரவர் வினைக்கு ஏற்றபடி 24 ஆன்ம தத்துவங் களைக் கொண்டு ஓர் உடல் கொடுக்குமாறு படைப்புக் கடவு களைக் கேட்டுக் கொண்டார். அப்படி வந்த உடலை எடுத்து ஆன்மா கெட்ட வழிகளில் கூத்தாடிக் கூத்தாடித் தோண்டியை உடைப்பது போல் பெற்ற உடலை இழந்து மீண்டும் கடைத் தேறாமல் போனது.*

*விளக்கம்: 10 மாதத்தில் ஓர் கடல் பிறக்கும் என்பதற்கு ஏற்ப நாலாறு என்ற சொல் பயன் தந்தது. சூயவன் என்பது மாயை என்றும் பொருள்படும்.*

*நந்தவனம் - பிரபஞ்சம்; ஆண்டி - பக்தன்; நாலாறு மாதம் - 10 மாதம் மற்றும் 24 மாதம்; சூயவன் படைக்கும் கடவுள்; தோண்டி - உடம்பு*

6. • *எதையும் அல்லது யாரையும் பழித்துச் சொல்லாதே தேடும் செல்வத்தில் ஒரு தூசு கூட நில்லாது போய்விடும் மூன்று விதமான ஏடணைகளும் பொல்லாதவையாகும். சிவத்தின்மேல் ஆர்வம் கொண்டால் இயமலோகம் போகாதிருக்கலாம்.*

*விளக்கம்: ஏஷணை = விருப்பம் இதுவே ஏடணை எனப்படும். 1. பொருள் தேடும் ஆசை; 2. குழந்தைப் பேறு உண்டாக ஆசை; 3. உலக விவகாரங்களில் ஆசை.*

7. *நல்ல வழியையே விரும்பு. எந்நாளும் விசனையே தேடு. நல்லவர் வல்லவர் கூட்டத்தில் சேர்ந்திரு. அந்த வள்ளலையே (சிவனையே) நெஞ்சில் வாழ்த்திக் கொண்டாடு.*

8. *நல்லவர்களை விட்டு விலகாதே முப்பத்திரண்டு அறங்களில் ஒன்றையும் தவற விடாதே. பொல்லாத செய்கைகளில் ஒன்றையும் மேற்கொள்ளாதே. கெட்டவர்கள் கூறும் பொய்மொழிக் கொள்கைகளைப் பொருந்துமாறு சொல்லாதே.*

9. *வேதங்கள் விதித்தபடி நடப்பாயாக. நல்லவர்கள் விரும்பாத்தக்க வழியாலேயே நீயும் விரும்பிச் செல்லுக எது இயலுமோ (சாதகம்)*

*அதையே வெளியில் சொல்லுக. கீழ்த்தரமான கோபத்தைக் கொன்றுவிடுக.*

10. *எதையும் பிச்சையாக யாரிடமும் கேளாதே. பெண்ணாசை கொண்டு பெரிதும் உழன்று வருந்தாதே. ஆசை உன்னை என்றும் ஆளுமாறு செய்யாதே. சிவன் மீது ஆசை கொண்டு அவனை அடையும் வழியிலேயே விலகாமல் நின்றிடுக.*

11. *மெய்ஞ்ஞானம் ஆகிய நன்னெறிப் பாதையில் தொடர்ந்து ஏறுக. தூய வேதாந்தம் எனப்படும். வெட்ட வெளியை ஆராய்ந்து அறிந்து கொள்க. அஞ்ஞானம் என்னும் அறியாமை வழியை அடைத்திடுக. உன்னை அண்டி வந்தவர்களுக்கு ஆனந்தமான வழியைக் கூறுக.*

12. *மெய்யான குருவின் சொல்லை விட்டு நீங்காதே. நன்மைகளை மேன்மேலும் செய்வதனை அடக்கி வைக்காதே. பொய்யான உணர்வுடன் நடக்காதே. நல்லதான உன் புத்தியைப் பொய்யான தனித்து வழியில் நடக்கவிடாதே. விளக்கம்: கலை - உணர்வு*

13. *உன் கூடவே வரக்கூடிய பொருள் எதுவுமே இல்லை. புழு உண்டாகும் கூட்டை எடுத்து அதில் நிலவை உலா வரும்படிச் செய்ய முடியுமா?*

*பல வடிவங்கள் கொண்ட தேட முடியாத அந்த மோட்சத்தின் உண்மையான எல்லையை மனிதர்கள் தேடி அதை அடைய முடியும் என்று தெளிந்தோடும் இல்லை.*

14. *ஐந்து பேர்கள் சூழ்ந்த காடே இந்த உடல். 25 தத்துவங்களும் அடைந்திருக்கும் நாடு இந்த உடல். இந்த உடலை பற்றுக் கொடாகக் கொண்டு மூலாதாரத்தை வருத்தி நீ தேடுவாயாக. அந்த மூலாதாரத்தை அறிந்தாலே மூத்திதான் வீடாகும்.*

*(இருபத்தைந்து தத்துவங்கள் - ஆன்ம தத்துவம் 24 - சில சமயங்கள் ஆத்மாவையும் தத்துவமாகச் சேர்க்கின்றன. அதனால் 25 ஆனால் தத்துவங்கள் கருவிகள் ஆகும். ஆத்மாவுக்குக் கருவிகள் துணை செய்யும் ஆத்மாவே கருவியாகாது).*

15. *நமக்குள்ளேயே நான்கு வகைக் கோட்டைகள் உள்ளன. அங்கே உடல் பகை உள்ளப் பகையை வீரட்டிக் கள்ளப் புலன்களாகிய காட்டை வெட்டியழிக்கக் கனலில் எரித்தால் முடிவில் மூத்தி என்னும் வீட்டைக் காணலாம்.*

*(நால்வகைக் கோட்டைகள் - நான்கு மனத்தின் பகுதிகள். அந்தக் காரணங்கள் மற்றும் மூலாதாரத்தின் நான்கு இதழ்ப் பகுதிகள்)*

16. *காரிக்குப் போனால் நம் வினைகள் நீங்குமா? அங்கு உள்ள கங்கையில் நீராடினால் நற்கதி கிடைக்கும் என்பது உண்மையா? பலவிதத் தத்துவங்களைப் பேசினாலே நம்முடைய கர்ம வினைப் பயன்கள் போய்விடுமா? நம்மிடையே பலவித வேற்றுமைகளைக் கைக் கொண்டு இருந்து கடவுகளைப் போற்றுவதால் மட்டுமே கர்மங்கள் தொலைந்து போகா.*

17. *பொய்யான வடிவங்களைப் பேற்றி வழிபட்டால் இவ்வுலகை விட்டு நம் உயிர் போகும் காலத்தில் நன்மை கிடைக்குமா? சுத்தமான தந்திரத்தை (சாலம்) மெய்யாக நம்பினாலும் அனுகூலம் எதுவும் இல்லை.*

19. *உலகில் உயர்ந்தது பக்தி அதைப் பற்றிக் கொண்டவர்க்கே மூத்தி கிடைக்கும். எல்லாரும் சிவனிடம் பக்தி செலுத்தினால் சிறப்புடைய அட்டமா சித்திகள் கிடைக்கும்.*

*விளக்கம்: அட்டமாசித்தி - எட்டு வகையான உயர்ந்த பயன்கள்.*

20. *அன்பு எனும் நல்ல மலரைத் தூவிப் பரமானந்தமான தெய்வத்தின் அடியினை விரும்பி இன்பமுடன் உன் உடல் ஆவி எல்லாம் நாளும் ஈடேற இங்கிருந்தே முயற்சி செய்வாயாக.*

21. *எளிதில் பெறமுடியாத வீடுபேற்றின் பெருமையை உணர்ந்து, அதற்கான வழிகளை அறிந்து கொண்டு, சிறிந்தும் கோபம் இல்லாது, ஆதியாகிய சிவனுக்கே இடைவிடாது தொண்டு செய்தால் அவனே அந்த வீடாகிய முத்தியில் கொண்டு போய்ச் சேர்த்திடுவான்.*

22. *ஆன்மாவால் ஆடிடும் இந்த ஆட்டம் தேகத்தில் ஆன்மா இருக்கும் போதேயாகும். உடல் வாடினால் வான் உலகின் மேல் தான் நாட்டம் உண்டாகும். நாளும் இப்படி விருப்பம் கொண்டால் கொண்டாட்டம் உனக்கு வரும்.*

23. *எட்டுக்குரிய 'அ', இரண்டுக்குரிய 'உ' எனும் எழுத்துக்களுக்கு உடம்பில் உள்ள பாகம் தொப்புள் முதல் தொண்டை வரையாம். இதை நன்கு உணர்ந்தால் வேதமெல்லாம் உனக்குள்ளேயாகும். (வேதம் - யோகும்)*

*இந்த உடற்பகுதியை ஒரே ஒளித்தூணாக நீ உணர்ந்திடு அதுபோல் வெட்ட வெளியையும் தியானித்து இரு. இதனால் ஆனந்த வெள்ளத்தில் மிகவும். மூழ்கிக் களிப்பாய்.*

*விளக்கம்: தமிழில் எட்டு என்னும் எண்ணை 'அ' என்றும் இரண்டு என்னும் எண்ணை 'உ' என்றும் வரி வடிவில் குறிப்பர்.*

*அ+உ+ம் என்னும் மூன்று ஒலிகள் சேரும்போது 'ஏம்' என்னும் பிரணவ மந்திரம் உருவாகும். வெட்ட வெளி - பரந்த வெற்றிடம்.*

24. *இந்த உலகத்திலும் உனக்குள்ளும் எந்தப் பற்றும் ஆசையும் வைக்காமல் எந்நாளும் இதை வெறுத்திடுக இதனால் உனக்குள் செர்தேன் வெள்ளமாகப் பெருகுவதை மொண்டு கொள்க. உன் சிந்தை தித்தித்துத் தெவிட்டும் அளவுக்கு அதனைப் படுகுக.*

25. *பொய்யான வேதத்தைப் பாராதே. அந்த வேத போதகர் சொல்லிலும் புத்தியைச் செலுத்தி ஆராயாதே. மை எழுதிய கண்களையுடைய பெண்களைச் சேராதே, கெட்டவர்களுடன் சேர்ந்து மகிழாதே.*

26. *நம்மை வைதவர்களை உடனே திருப்பி வையாதீர்கள். இந்த உலகமே இல்லாது போனாலும். கடவுள் இல்லாது போகமாட்டார் கொடிய வினைகள் செய்யாதீர்கள். கல் எடுத்து வீனே பறவைகள் மீது எறியாதீர்கள்.*

27. *சிவம் தவிர வேறு தெய்வத்தை விரும்பித் துதிக்காதே தீங்கு தரும் சண்டையைக் கிளறிக் தூண்டிவிடாதே தவநிலையை விட்டுத் தாண்டாதே. தூய்மையான சன்மார்க்கம் கூறாத நூல்களை விரும்பாதே.*

*(சன்மார்க்கம் - தூய்மையான நன்னெறிகள்)*

28. *பாம்பைப் பிடித்து ஆடச் செய்யாதே. உன் மனைவியை நீயே பழித்துக் காட்டாதே. வேம்பு போல் கசந்த உணர்வை உலகில் யார்க்கும் உண்டாக்காதே. உன் வீறாப்பை யாரிடமும் விளங்கும் படிச் செய்யாதே.*

*விளக்கம்: பாம்பு இடக்கர் அடக்கலாக ஆண் குறியைக் குறித்தது.*

29. *பிறர் போற்றும் சடங்கைச் சென்று காணாதே. உன்னை நீயே புகழ்ந்து பிறரிடம் சொல்லாதே பேசுவதற்கு முன் வாழ்வு பற்றிக் கனவு காணாதே. பிறர் தாழும்படி எந்தத் தாழ்வும் செய்யாதே.*

30. *கஞ்சாப் புகையை உட்கொள்ளாதே போதைக்கு மயக்கிக் கள் குடிக்காதே. உயிர்க் கொலை செய்யாதே. அறிவை மயக்கும் அஞ்ஞான நூல்களைப் படிக்காதே.*

31. *பத்தியை நிலைநாட்டித் தொந்தமும் இல்லாத இடக்கைப் பார் அதில் நீண்ட நேரம் இரு. சத்தியமான கடவுளை அங்கிருந்து நினைத்துப் பார். நாள்தோறும் இப்படிச் செய்து அதை உன்வசம் ஆக்கிவிடு. சமயங்களில் உன்னை ஈடுபடுத்தாதே.*

32. *சொல்லமுடியாத பலவித தீய ஆசைகள் எல்லாவற்றையும் சீ! என்று விலக்கித் தள்ளு. திடம் தரும் விவேகமான அட்டாங்க யோகத்தை நன்கு சிந்தித்து அறிவாய். அதனால் உண்மையான சம்போகம் (கூடல் அனுபவம்) உனக்குக் கிடைக்கும்.*

33. *எவ்வகையான நல்ல நீதிகள் எங்கெங்கு உண்டோ, எல்லாம் அறிந்து பிறருக்கு எடுத்துச் செய்க. ஒவ்வாதன வாகிய பல சாதிகள் யாவும் ஒன்று என்றே அறிந்து உணர்ந்து நன்கு தெளிந்திடுக.*

34. *கள்ளத்தன்மையால் பக்தி வேடம் புனையாதே கங்கை முதலிய பல புண்ணிய தீர்த்தங்களிலும் நீ முழுகாதே. கொள்ளையாகப் பிறர் பொருளைக் கொள்ள நினைக்காதே நட்புக் கொண்டவர் பற்றி அவருக்குப்பின் கோள் முட்டாதே.*

35. *எங்கும் பிரகாசிக்கும் வெற்றியுள்ள கடவுள், அன்பர்கள் இதயத்தில் இன்பமாய் இருந்திடும் வாசன் அடியார்களுக்கு அடியவன், தன்னைத் துதிக்கிறவர்களுக்கு நல்ல பதவி அவளும் ஈசன்.*

## 4. இராவண காவியம்

*இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழியில் தோன்றிய காப்பியங்களுள் ஒன்றாகும். திராவிட இயக்கத்தின் சிந்தனையால் பகுத்தறிவு பாதையில் ஆரிய கலாச்சாரத்தைப் பின்னுக்குத் தள்ளி விட்டு தமிழ் மொழியை, தமிழறை இலங்கை வேந்தன் இராவணனை முன்னிலைப் படுத்தி எழுதிய காப்பியமாகும்.*

| | | |
|---|---|---|
| *காப்பியத்தின் பெயர்* | : | *இராவண காவியம்* |
| *நூலாசிரியர்* | : | *புலவர் குழந்தை* |
| *காலம்* | : | *கி.பி. 1946* |
| *பிரிவு* | : | *ஐந்து காண்டங்கள்* |
| *படலங்கள்* | : | *57* |
| *பாடல்கள்* | : | *3100* |

*இக்காப்பியம் இராவணனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டு படைக்கப்பட்ட சிறந்த காப்பிமாகும்.*

### இராவண காவியம்
### வேறு வண்ணம்

18. ஏடுகை யில்லா ரில்லை யியலிசை கல்லா ரில்லை
பாடுகை யில்லா ரில்லை பிள்ளியோ செல்லா ரில்லை
ஆடுகை யில்லா ரில்லை யதன்பயன் கொள்ளா ரில்லை
நாடுகை யில்லா ரில்லை நற்றமிழ் வளர்ச்சி யம்மா.

19. தமிழென திருகட் பார்வை தமிழென துருவப் போர்வை
தமிழென துயிரின் காப்புத் தமிழென துளவே மார்ப்புத்
தமிழென துடைமைப் பெட்டி தமிழென துயர்வுப் பட்டி
தமிழென துரிமை யென்னத் தனித்தனி வளர்ப்பர் மாதோ.

20. நாடெலாம் புலவர் கூட்டம் நகரெலாம் பள்ளி யீட்டம்
வீடெலாம் தமிழ்த்தாய்க் கோட்டம் விழவெலாந் தமிக்கொண் டாட்டம்
பாடெலாந் தமிழின்றோட்டம் பணையெலாந் தமிழ்க்கூத்தாட்டம்
மாடெலாந் தமிழ்ச்சொல் லாட்டம் வண்டமி ழுகது மாதோ.

21. உண்டியை யுண்ணுர் பொன்பட் டுடையினை யெண்ணுர் கன்னற்
கண்டினைப் பேணுர் செம்பொற் கலன்களைப் பூணுர் வண்ணச்
செண்டினைச் சூடார் சாந்தத் திரளினை நாடார் யாழின்
தண்டினைத் தீண்டார் யாருந் தமிழ்மொழி பயிலாக் காலே.

## கலிவிருத்தம்

22. பாடுபவ ருக்குமுரை பண்ணுபவ ருக்கும்
ஏடதுவி ரித்துரை யிசைப்பவர் தமக்கும்
நாடுநக ரோடவர் நயப்பவை கொடுத்தும்
தேடிவரு வித்துமுயர் செந்தமிழ் வளர்த்தார்.

## தமிழ்மொழிப் படலம்

### நற்றமிழ் வளர்ச்சியில்லை:

*தமிழ்மொழியினை வளர்ப்பதாகக் கூறுபவர்களின் கைகளில் பழந்தமிழரின் பெருமை பேசும் ஏடுகள் இல்லை. தமிழிசையின் சிறப்பினை விளக்கும் இயல், இசைத் தமிழின் நுட்பங்களைக் கற்கவில்லை. அவர்களுக்கென்று வேலைகள் எதுவுமில்லை. கல்வி யினைக் கற்றுத் தேர்வதற்குப் பள்ளிகளுக்கும் செல்வதில்லை. தமிழிசைக்களுக்கு ஏற்ப இசைகளுக்கு நடனம் ஆடவும் தெரிவதில்லை. தமிழிசையின் பயன்களையும் அறிந்து கொள்ளுவதற்கு விருப்பப் படுவதுமில்லை. ---றிகைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற நாட்டம் எதுவுமின்றி நற்றமிழ் வளர்ச்சி இல்லை.*

### தனித்தமிழ் வளர்த்தல்

*தமிழ்மொழி என் இருகண் பார்வையாகவும், என்னுடைய உருவத்திற்குப் போர்வையாவும் செயல்படுகின்றது. தமிழ்மொழி என்னுயிர் காப்பாகச் செயல்படுகின்றது. தமிழ் என் உணர்வுக்கு மாண்பு; தமிழ் என் உடைமையின் பெட்டியாகத் திகழ்கின்றது. தமிழ் என் உயர்வுக்கு வழிகாட்டி. தமிழ் மொழியை வளர்ப்பது என்னுடைய உரிமையென்று தனித்தனியாக வழிகாட்டுவர்.*

### புலவர் கூட்டம்

*தமிழை வளர்ப்பதாகச் சொல்லிக் கொண்டு நாடு முழுவதும் தமிழ்ப் புலவர்களின் கூட்டம். நகரங்களில் எல்லாம் மிகுதியாகத் தமிழ்ப் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. வீடெல்லாம் தமிழ்த்தாயின் கோட்டமாகவும், விழாக்களில் எல்லாம் தமிழ்மொழியை முதன்மையாகக் கொண்டாடிக் கொண்டிருக் கிறார்கள். பாடெல்லாம் தமிழின் தேட்டமாகவும், வயல்வெளிகளில் எல்லாம் தமிழின் கூத்தாட்டமாகவும், திரும்பிய பக்கமெல்லாம் தமிழ்ச் சொல்லாட்டாகத் தமிழகத்தில் இருக்கிறது.*

### தமிழ்மொழி பயிலாத சூழல்

*தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ளாமல் உணவினை உண்ண வில்லை. அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய பட்டாடையை*

*மனதிலும் கூட எண்ணவில்லை. இனிமையான சுவை தருகின்ற இனிப்புக் கட்டிகளைப் பேணவில்லை. செம்பொன்னூல் செய்த அணி கலன்களை அணியவில்லை. வண்ணப் பூச்செண்டினைக் கூந்தலில் சூடவில்லை. சந்தனக் கலவையினை உடலில் 1பூசிக் கொள்ளவில்லை. இனிய இடையினைத் தரும் யாழின் நரம்புகளைத் தீண்டவில்லை.*

## செந்தமிழ் வளர்த்தல்

*பாடலைப் பாடுபவருக்கும், பாடலுக்கு உரைவிளக்கம் செய்பவர் களுக்கும், நூலினை விரித்து உரை சொல்பவர்களுக்கு, அதனை நல்லிசைப்பவர்களுக்கும், பாடுபடுவர்களின் தேவை அறிந்து அவர் விரும்புவற்றை அள்ளிக்கொடுத்தும் புலவர்களைத் தேடி வருவித்தும் செந்தமிழ் வளர்த்தார்.*